# தமிழர் பொருண்மியம்

வாரமலர் TAMILS ECONOMY



விலை - 50/= இதழ் - 35 13.09 2023

தென்னமரவாடிப் பெண்களும், சுயசார்புப் பொருளாதாரமும்! 02

ஆட்கொல்லி ரோபாட்கள் ஆபத்தை உணராத உலகம் 06

"செய்யும் தொழிலே தெய்வம்" 12

## இலாபம் தரும் கொய்யாப் பயிர்ச்செய்கை

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# தென்னமரவாடிப் பெண்களும் சுயசார்புப் பொருளாதாரமும்!



- காயத்திரி நளினகாந்தன் -

ஓர் ஊரில் கடைகள் கிடையாது. சந்தை கிடையாது. உணவகம் கிடையாது. மருந்தகம் கிடையாது. மதுபானசாலை கூட இல்லாத இடத்தில் மக்கள் தமது சொந்த முயற்சியால் தமக்குத் தேவையானவற்றை தாமே உற்பத்தி செய்து ஆரோக்கியமாகவும் தன்னிறைவுடனும் வாழமுயற்சிப்பது ஆச்சரியமாக உள்ளது அல்லவா?

தென்னவன்மரவடி என்ற பண்டைய வரலாற்றுப்பெயரை உடையதும் தற்போது தென்னமரவாடி என அழைக்கப்படுவதுமான செல்வச் செழிப்பையும் கலாசாரப் பாரம்பாரியங்களையும் கொண்ட சிற்றூரானது திருகோணமலை முல்லைத்தீவு பாதையில் இருந்து 15 கிலோ மீட்டர் கிழக்கே செல்லும்போது முல்லைத்தீவு திருகோணமலை எல்லையில் எம்மை வரவேற்கும்.

இக் கிராமம் பற்றிப் பல வரலாற்று தொன்மைகளுடன் தொடர்புபட்ட கதைகள் இருந்தாலும் தென்னவன் என்ற சிற்றரசர் இப்பகுதியை ஆட்சி செய்ததாகவும் அவன் வழிக்குடிகள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதால் இதனைத் தென்னவன் மரபு அடி என அழைக்கப்பட்டதாகவும் பின்னர் இது மருவி தென்னமரவாடி என அழைக்கப்படுவதாகவும் நம்பப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தினால் பல்வேறு காலகட்டங்களில் இவர்கள் இடம்பெயர்ந்து வன்னி மற்றும் திருகோணமலை நகர்ப் பகுதிகளுக்கு சென்றபோதும் 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபை உருவாக்கத்தின் ஆதரவுடன் முழுமையாக மீள்குடியேற்றப்பட்டார்கள். தற்போது 80க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 155 பேர் வசித்து வருகின்றார்கள். இங்கு 66 வீதமானவர்கள் பெண்களாக இருப்பதோடு 35 வீதமானவர்கள் பெண்கள் குடும்பங்களுக்கு தலைமை தாங்குபவர்களாக குடும்பங்க விளங்குகின்றார்கள்.

> **“தமக்குத் தேவையான அரிசி மற்றும் காய்கறி, பழங்கள் முதலியவற்றைத் தாமே உற்பத்தி செய்வதால் ஒவ்வொருவருடைய வீட்டிலும் நெல் மூடைகள் காணப்படுவதோடு கத்தரி, வெண்டி, பயிற்றை போன்ற பயிர்களைப் பயிரிடுகின்றார்கள். வேறு சிலர் மிளகாய் இஞ்சி, மஞ்சள், வெங்காயம் போன்ற இதர தேவைகளுக்கு ஏற்ப பயிர்களைப் பயிரிடுவதோடு மேலும் சிலர் கீரை மற்றும் கிழங்கு வகைகளையும் பயிரிடுகின்றார்கள். ”**

இக்கிராமமானது திருகோணமலை நகரப்பகுதியில் இருந்து சுமார் 90 கி.மீ தொலைவில் அரச நிர்வாக எல்லைக்கு சற்று அப்பால் இருப்பதால் கிரமமான போக்குவரத்து இன்மையுடன் இரண்டு நாளைக்கு ஒருமுறை பேருந்து சேவை காணப்படுகின்றது. கிராமிய சுகாதார நிலையக் கட்டடம் காணப்படுகின்ற போதும் நிலையான வைத்தியரோ தாதியரோ காணப்படாமையுடன் மருத்துவ வசதிகளும் பெறமுடியாத நிலை காணப்படுகின்ற போதும் மக்கள் தாமாகவே தாதியொருவரை நியமித்து அவருக்கான கொடுப்பனவை வழங்கிச் சேவையை பெற்று வருவதுடன் இதற்கான உதவியினைத் தமது புலம்பெயர் உறவுகளிடம் பெற்றுக்கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பெண்கள் அமைப்பானது கர்ப்பிணித் தாய்மார்களின் நலனைப் பேணும் வகையில் கிழக்கு மாகாணப் பிராந்திய பணிப்பாளருடன் தொடர்பினை ஏற்படுத்தி மாதம் ஒரு முறை அவர்களுக்கான சேவையினை பெற்றுக்கொள்ள ஆவனசெய்துள்ளது.

இருப்பினும் பல ஆண்டுகளுக்கு மேலாகச் செப்பனிடப்படாத வீதிகள் காணி அபகரிப்பு காணிகளுக்கான உரிமம் வழங்காமை பாடசாலைக்கான ஆசிரியர் இன்மை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் இவர் கள், அந்தப் பிரச்சினைகளை மிகவும் இலாவகமாக கையாண்டு வெற்றி பெற்று கொடுக்கும் அமைப்பாக இங்குள்ள 32 பெண்களை அங்கத்தவர்களாக கொண்ட பெண்கள் கிராமிய அபிவிருத்தி அமைப்பு பல சுயசார்புப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கிராமத்தில் முன் னெடுத்து வெற்றி கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

மேலும் தமக்குத் தேவையான அரிசி



மற்றும் காய்கறி, பழங்கள் முதலியவற்றைத் தாமே உற்பத்தி செய்வதால் ஒவ்வொரு வருடைய வீட்டிலும் நெல் மூடைகள் காணப்படுவதோடு கத்தரி, வெண்டி, பயிற்றை போன்ற பயிர்களைப் பயிரிடு கின்றார்கள். வேறு சிலர் மிளகாய், இஞ்சி, மஞ்சள், வெங்காயம் போன்ற இதர தேவை களுக்கு ஏற்பப் பயிர்களை பயிரிடுவதோடு மேலும் சிலர் கீரை மற்றும் கிழங்கு வகைகளைப் பயிரிடுகின்றார்கள்.

இவ்வாறு வேறுபட்ட பயிர்களை பர வலாகப் பயிரிட்டுத் தமது தேவைக்கு ஏற்ப தமக்கிடையே விளைபொருட்களை மாற் றிக் கொள்கிறார்கள். உதாரணமாக இன்று தமக்கு கீரை தேவைப்படுபவர்கள் தமது கத்தரிக்காயினைக்கொடுத்து கீரையை பெற்றுக்கொள்வார்கள். இவ்வாறு பழங்கள் கிழங்குகளையும் மாற்றிக்கொள்வார்கள். இது பண்டைய பண்டமாற்று முறை மையை ஞாபகப்படுத்துகின்றது. இதில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதை சங்கமானது ஊக்கப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலானோர் வீடுகளில் கால் நடைகள் வளர்க்கப்படுவதால் அவை அசைவ உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இதேபோன்று இக்கிராமம் களப்பினால் சூழப்பட்டுள்ளதால் கடல் உணவுகளை பெறும் வகையில் பெண்கள் தமது ஒய்வு வேலைகளில் இறால் மற்றும் நண்டு பிடித் தலில் ஈடுபடுகின்றனர். மேலும் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தையும் கொண்டுள் ளார்கள். இங்கு பல்வேறுபட்ட மருத்துவ குணம் கொண்ட பல செடிகள் வளர்க்கப்பட்டு மூலிகைத்தோட்டமும் காணப்படுவதுடன் இது இக்கிராமத்துக்குத் தேவையான பாரம்பரிய மருத்துவ முறைமைக்கு வழி சமைத்துள்ளது.

விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பு போன்றவற்றுக்குத் தேவையான அனுச ரனையான விடயங்களை தென்னமரவாடி பெண்கள் அமைப்பானது பொருத்தமான சேவை வழங்குநருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொடுக்கின்றது. குறிப்பாக விவ சாய ஆலோசனைகள் கால்நடை பராம ரிப்பு மற்றும் விவசாயக் காப்புறுதி திட்டங் கள் போன்றவற்றை பெற உதவுகின்றது. இவ்வாறே பொருளாதர மற்றும் உற்பத்தி திட்டங்களை நிதி வழங்குநரின் உதவி யுடன் தமது கிராமத்தில் அமுல்படுத்தி வருகின்றது. அவற்றில் செவ்வாழை உற் பத்தித் திட்டம் குறிப்பிடத்தக்கது.

இங்கு 25 பயனாளிகள் நிபந்தனை யின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு 5 செவ்வாழை வீதம் வழங் கப்பட்டுள்ளதுடன் இவர்கள் 6 மாத காலப் பகுதியில் தலா ஒரு வாழைக்குட்டி வீதம் பெண்கள் அமைப்புக்கு வழங்குகின்றார் கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட குட்டிகள் வேறு சில பயளாளிகளுக்கு வழங்கப்படு கின்றன. இதே போன்று நாட்டுக்கோழிகள் 25 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு 5 மாத காலத்திற்குப்பிற்பாடு 5 முட்டைகள் வீதம் அமைபபானது பெற்றுக்கொண்டு இதனை குஞ்சுகளாக்கி வேறு சில பயனா ளிகளுக்கு வழங்கி வைக்கின்றது. இத னால் தொடர்ச்சியாகத் திட்டத்தினை முன் னெடுத்துச்செல்லவும் அதிகளவானோர் பயன்பெறவும் வாய்ப்பு உருவாவதோடு நிலைபேறான செயற்பாடாகவும் அமை கின்றது.

இருப்பினும் இப்பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகம் காணப்படுவதால் அவ் வப்போது ஊருக்குள் வருகைந்து பயிர்க ளையும், வயல்களையும் நாசம்செய்து செல்வது வழமை. எனவே யானைகளிடம் இருந்து தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு கிராம மக்கள் ஒன்றிணைந்து யானைக் கான பாதுகாப்பு வேலியை அமைத்து இதனை உரிய முறையில் கண்காணிக்க ஊழியர் ஒருவரை நியமித்து அவருக்கான ஊதியத்தினையும் மக்கள் அனைவரும் இணைந்து வழங்குகின்றார்கள். இவ் வூழியர் குறித்த யானை வேலியினை சரியான முறையில் பராமரிப்பதோடு நாள் தோறும் யானைகளின் வருகையினை மக்களுக்கு எச்சரித்துப் பாதுகாப்பினை மேற்கொண்டும் வருகிறார்.

மேலும் மதுபானகடை, சட்டவிரோத மது உற்பத்திக்குபெண்கள் அமைப்பா னது எதிர் வினையாற்றுவதாலும் விழிப்பு ணர்வை ஊட்டுவதாலும் ஒருவர் மதுபானம் அருந்துவதற்கு ரூபாய் 1000 த்தினை போக்குவரத்திற்கு செலவு செய்ய வேண்டி யிருப்பதாலும் மதுப் பாவனை கணிசமான அளவு குறைவாகக் காணப்படுவதோடு, வன்முறைகள் அற்ற சமூகமாகவும் தமது குழந்தைகளின் கல்விக்கு அதிக முக்கியத் துவம் கொடுக்கும் விழிப்புணர்வை கொண் டவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

தமது வாழ்க்கைக்கான வழிமுறை களை தாமே உருவாக்கி சிறப்பான முறை யில் செயற்படுத்தி வரும் தென்னமரவாடி பெண்கள் சமூகமானது தமக்கு முன் உள்ள சவால்களை ஏனைய அமைப்புக்க ளுடன் ஒன்றாக இணைந்து வெற்றி கொண்டு இன்றைய உலக மயமாக்கலுக் குள் அகப்படாது சுயசார்புத் தன்னிறைவு பொருளாதாரத்திற்கு அடித்தளமிடும் ஆரோக்கியமான வாழ்வை தாமே தெரிவு செய்து வாழும் இம்முறையானது இன்றைய சூழலில் கிராமங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள முன்னுதாரணமாக கைக்கொள்ளக்கூடிய செயற்பாடாக விளங்குவதுடன் ஏனைய கிராமங்களுக்கும் வழிகாட்டலாக அமை கின்றது என்றால் மிகையாகாது.

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0764438620

# ஊழியர் சேமலாப நிதியும் ஜனாதிபதியின் உறுதியும்

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கின்றார். பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பணம் பெறப்படும் எனவும், அதன் வட்டி வீதம் குறைக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தது. அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் தயாராகிவந்த ஒரு பின்னணியிலேயே ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், “கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்வரும் வாரத்தில் நிறைவு செய்யவேண்டும். நிறைவு செய்யாவிட்டால் அனைத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்படும் என்றும், நாட்டை மற்றவர்கள் பொறுபேற்கத் தயங்கிய நேரத்தில் நான் பொறுப்பேற்று நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளேன்” என்றும் தெரிவித்திருக்கின்றார். ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில் இருந்த மக்களுக்கு ஜனாதிபதியின் அறிவிப்பு நிம்மதியைக் கொடுத்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கான வட்டியை ஒன்பது வீதமாகக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இது தொடர்பான சந்தேகங்கள் உருவாகியிருந்தன. ஆனால், “மேலும் ஊழியர் சேமலாபநிதியத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. 9 வீதத்தை நிச்சயமாக தருவதாக நாங்கள் உறுதியளித்துள்ளோம். அந்த 9 வீதத்தையும் நான் தெரிவு செய்யவில்லை. கடந்த ஆட்சியில் தான் அதுவும் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே அது பற்றி என்னிடம் பேச வேண்டாம்” என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது என்பது உண்மை. இதனை எவ்வாறு முன்னெடுப்பது என்பதற்கான திட்டங்கள் சிலவற்றை அரசாங்கம் வகுத்திருந்தாலும் அவற்றைப் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. சர்வதேச நாணய நிதியமும் இம்மாதத்துக்குள் இவற்றில் முன்னேற்றங்களை எதிர்பார்க்கின்றது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இடம்பெறும் அதேவேளையில் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பும் இடம்பெற வேண்டும் என்பதுதான் சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பு.

உள்நாட்டுக் கடன்களைப் பொறுத்தவரையில் வங்கிகளிடமிருந்தும், ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்தும்தான் அரசாங்கம் அதிகளவுக்குக் கடன்பெற்றுள்ளது. அதனால், அவற்றில் கை வைக்கப்படும் என எதிர்பார்ப்பது இயற்கையானதுதான். ஆனால், ஊழியர் சேமலாப நிதியம் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஊழியர்களின் வாழ்நாள் சேமிப்பு இதனால் பாதுகாக்கப்படும் என்பது மகிழ்ச்சக்குரிய ஒரு செய்திதான்!

# அன்புள்ள ஆசிரியருக்கு....



## சந்திரியான் வெற்றியும்

கடந்த வாரம் தமிழர் பொருண்மியம் வெளியிட்டிருந்த “சந்திரியான் வெற்றியும் - இலங்கை உலகப் பொருளாதாரத் தாக்கமும்” என்ற கட்டுரை சிறப்பானதாக இருந்தது. சந்திரியான் விவகாரத்தைக் கட்டுரையாளர் விரிவாக ஆராய்ந்து அதன் பின்னணியில் இருக்கக்கூடிய பொருளாதார விடயங்களை வெளிப்படுத்தியிருப்பதன் மூலமாக மிகவும் பயனுள்ள தகவல்களைத் தந்திருக்கின்றார். சந்திரியானின் பின்னணியில் இந்தளவுக்குப் பொருளாதார விடயங்கள் இருக்கும் என்பது ஆச்சரியமாக இருக்கின்றது. கட்டுரையாளருக்கும் பத்திரிகை ஆசிரியருக்கும் வாழ்த்துக்கள்.

**சங்கர் நவநீதன், கந்தர்மடம்.**

●●●

## பிரிக்ஸ் எதனைச் சாதிக்கும்?

பிரிக்ஸ் என்ற அமைப்புத் தொடர்பாகப் பெரிதும் பேசப்பட்டாலும் அது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த “பிரிக்ஸ் எதனைச் சாதிப்பும்?” என்ற கட்டுரை பெருமளவுக்கு உதவியது. சர்வதேச அமைப்புக்கள் பொருளாதார நலன்களைச் சார்ந்தும் செயற்படுகின்றன. அது தொடர்பாகவும் தமிழர் பொருண்மியம் கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. இது போன்ற சர்வதேச பொருளாதார அம்சங்களை வெளிப்படுத்தும் கட்டுரைகளையும் நீங்கள் தொடர்ந்தும் வெளியிட வேண்டும்.

**சர்வானந்தன். மானிப்பாய்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------------------
**முகவரி** - ----------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - -----------------------------------
**சந்தாக் காலம்** - ------------------------------------------
**செலுத்திய தொகை** - -------------------------------------
**செலுத்திய திகதி** - ---------------------------------------

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



புதன்கிழமை
13.09.2023




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,60,200 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,74,750 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 150/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 160/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 160/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 60/= |
| புடோல் | - 80/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 220/= |
| பெரிய வெங்காயம் | - 200/= |
| பாவற்காய் | - 400/= |
| வெண்டிக்காய் | - 80/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 150/= |
| லீக்ஸ் | - 160/= |
| பீற்றூட் | - 120/= |
| கறிமிளகாய் | - 300/= |
| முருங்கைக்காய் | - 100/= |
| போஞ்சி | - 450/= |
| கத்தரி - தம்புள்ள | - 120/= |







**கேள்வி -** இந்தியாவின் நலன்களுக்குப் பாதகமாக தாம் எதனையும் செய்யப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் உறுதியளித்திருந்தாலும், எரிபொருள் விநியோகத்திலும் சீனா இப்போது கால் பதித்துள்ளதே? உண்மையில் இலங்கையின் நிலைப்பாடு என்ன?

**பதில் -** ஜனாதிபதி எவ்வாறு சொன்னாலும் சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை அகப்பட்டுக்கொண்டிருப்பதால், அதிலிருந்து மீள முடியாத ஒரு நிலையில் இலங்கை தொடர்ந்தும் இருக்கின்றது என்பதே உண்மை நிலையாகும். இந்த நிலையில்தான் இந்தியாவுக்குப் போட்டியாகச் சீனாவும் இப்போது எரிபொருள் விநியோகத்தை இலங்கையில் ஆரம்பித்திருக்கின்றது. சினோபெக் நிறுவனத்தின் மூலமாகச் சீனாவின் பிரவேசம் இடம்பெற்றிருக்கின்றது.

இலங்கையில் எரிசக்தி செல்வாக்குக்காக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டி இருதரப்பு உறவுகளுக்கு அப்பால் பரந்த தாக்கங்களைக் கொண்டுள்ளன.

இரு நாடுகளும் மூலோபாய மேலாதிக்கத்துக்காக போட்டியிடும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், இது புவிசார் அரசியல் போட்டியின் ஒரு பகுதியாகும். இலங்கையின் மூலோபாய இருப்பிடம் மற்றும் அதன் எரிசக்தி வளங்கள் இந்த அதிகாரப் போராட்டத்துக்குள் சிக்கிவிடும் நிலை உள்ளது.

இலங்கையின் எரிசக்தித் துறையில் சீனாவின் அணுகுமுறை இலங்கையின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்குத் தீங்கு விளைவிக்கும்.

இந்தியப் பெருங்கடலில் அமைந்திருப்பதன் காரணமாக, இலங்கை நீண்டகாலமாக ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நாடாக சீனாவால் பார்க்கப்பட்டது. இந்தக் காரணத்திற்காக, பெய்ஜிங் பல ஆண்டுகளாக இலங்கையில் அதன் இருப்பையும் செல்வாக்கையும் தீவிரமாக உயர்த்தியுள்ளது, குறிப்பாக எரிசக்தி துறையில், தாக்கத்தைச் செலுத்திவருகின்றது.

சீன எரிபொருள் நிறுவனமான 'சினோபெக்' நாடு பூராகவும் தமது கிளைகளை நிறுவவுள்ளது என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சராக காஞ்சன விஜேசேகர தெரிவித்திருக்கின்றார்.

சினோபெக் நிறுவனம் தமது முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஆரம்பித்துள்ளது. நாடு பூராகவும் 150 நிலையங்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

அத்துடன், ஆஸ்திரேலிய யுனைடட் பெற்றிலோலிய நிறுவனமும் இவ்வருடத்துக்குள் தமது சேவையை நாட்டில் ஆரம்பிக்கும். அதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கேளுங்கள் தருகின்றோம்**

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி - tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 199/= |
| கனடா டொலர் - | 230/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 337/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர்டொலர் - | 230/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 394/= |
| சுவிஸ் பிராங் - | 351/= |
| அமெரிக்க டொலர் - | 311/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 211/= |
| கனடா டொலர் - | 242/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 354/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 242/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 411/= |
| சுவிஸ் பிராங் - | 371/= |
| அமெரிக்க டொலர் - | 328/= |

# ஆட்கொல்லி ரோபாட்கள் ஆபத்தை உணராத உலகம்



செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் இன்றைக்குப் பல துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. தொழில்நுட்பம் மனிதர்களுக்கு நண்பனாகவும் பாதுகாவலனாகவும் இருக்க வேண்டும். ஆனால், அதன் கையில் துப்பாக்கியைக் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன உலக நாடுகள். எந்தவொரு தொழில்நுட்பத்தையும் ஆயுதமாக மாற்றுவது இராணுவத்தின் முக்கிய இலக்கு. செயற்கை நுண்ணறிவு மட்டும் இதில் விதிவிலக்காக இருக்குமா என்ன?

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்த அமெரிக்க அரசாங்கம் சமீபத்தில் ஒரு துறையை உருவாக்கியது. அதன் முக்கிய ஆலோசகராகப் பணிபுரிபவர், கூகுள் நிறுவனத்தின் முன்னாள் முதன்மைச் செயலாளரான எரிக் ஸ்மித் என்பதிலிருந்து இவ்விஷயத்தின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அமெரிக்கா என்றல்ல, பல நாடுகள் செயற்கை நுண்ணறிவை இராணுவப் பயன்பாட்டில் ஈடுபடுத்தும் ஆய்வுகளில் இறங்கியிருக்கின்றன. ஆயுதங்களைச் செயற்கை நுண்ணறிவுகொண்ட 'ஸ்மார்ட்' ஆயுதங்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பத்தை இராணுவம் பயன்படுத்துவது காலம்காலமாக நடப்பதுதான். இப்போது என்ன புதுச் சிக்கல்?

### கடவுளின் கட்டளை

நேற்று வரை தொழில்நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் மனிதர்களால்தான் இயக்கப்பட்டன. அதிநவீன ஏவுகணை உருவாக்கப்பட்டிருந்தாலும், அது எந்த இடத்தில் தாக்க வேண்டும் என்கிற முடிவை எடுத்தது என்னவோ மனிதர்கள்தான். ஆனால், செயற்கை நுண்ணறிவுடன் கூடிய போர்க் கருவிகள் அப்படிச் செயல்படாது.

"முந்தைய தொழில்நுட்பங்கள்/கருவிகள் எவையும் முடிவுகள் எடுக்காது. ஆனால், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் முதல் முறையாகத் தானாகவே முடிவுகளை எடுக்கிறது. இதுதான் அச்சப்பட வேண்டிய விஷயம்" என்கிறார் சிந்தனையாளர் யுவால் நோவா ஹராரி.

இன்று செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் நம் அன்றாட வாழ்க்கையில் நுழைந்து ஏற்கெனவே முடிவுகளை எடுத்து நம் வாழ்க்கையின் மீது தாக்கத்தைச் செலுத்திக்கொண்டுதான் இருக்கின்றன. உங்களுக்கு வங்கிக் கடன் கொடுக்க வேண்டுமா என்பதில் தொடங்கி, வேலைக்கான உங்கள் விண்ணப் பத்தைத் தேர்வு செய்வது வரை செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்கள்தான் முடிவெடுக்கின்றன.

ஆனால், அந்த அல்காரிதங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்று கேட்டால், அதை உருவாக்கிய நிபுணர்களே 'தெரியாது' என்கிறார்கள். செயற்கை நுண்ணறிவின் அடிப்படை அல்காரிதங்கள் செயல்படும் விதத்தை 'பிளாக் பாக்ஸ்' என்கிறார்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)

**"கொடுக்கப்படும் தகவல்களிலிருந்தும், ஒரு நபரின் நடவடிக்கைகளைப் பகுப்பாய்வுசெய்வதன் மூலமும் இவர் குற்றவாளியாகவோ தீவிரவாதியாகவோ இருக்கலாம் என்று முடிவெடுக்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் சந்தைக்கு வந்துவிட்டன. 'பிரெடிக்டிவ் போலீஸிங்'** (Predictive policing) **எனும் இந்த மென்பொருள்களை இராணுவத்துக்கு விற்பது பெரிய காரியமில்லை!"**

## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார் படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457





(06ஆம் பக்ககத் தொடர்ச்சி)

அதாவது, அது எப்படி இயங்குகிறது என்று தெரியாது. ஆனால், அதன் முடிவுகளை மட்டும் கடவுளின் கட்டளையாக அப்படியே அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

### சுயமாகத் தாக்கும் ட்ரோன்கள்

இங்குதான் சிக்கல் தொடங்குகிறது. தாக்குதலுக்கு இராணுவங்கள்பயன்படுத்தும் டிரோன்கள் முழுக்க முழுக்கச் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களால் இயக்கப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்புவரை டிரோன்கள்யாரைச் சுட வேண்டும், எங்கு வெடிகுண்டு வீச வேண்டும்என்பதை அந்தக் குழுவின் இராணுவ கமாண்டோ முடிவுசெய்வார். வல்லுநர் சரியான இடத்தில் வெடிகுண்டை வீசுவார்.

ஆனால், இப்போது உருவாக்கப்படும் செயற்கை நுண்ணறிவு இராணுவ மென்பொருள்களும், செயற்கை நுண்ணறிவு ரோபாட்களும்முழுக்க முழுக்கத்தாமாகவே இயங்குபவை மனிதர்கள் இயக்க வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல் கொடுக்கப்படும் தகவல்களை வைத்து தாமாகவே முடிவெடுக்கும் திறனும் இவற்றுக்கு உண்டு.

அமெரிக்கா தொடங்கிப் பல நாடுகள் இராணுவத்துக்கு அதிகமான நிதியை ஒதுக்குவதால், நீங்கள் ராணுவக் கருவி உற்பத்திசெய்யும் ஒப்பந்தத்தைப் பெற்றுவிட்டால் இலாபத்தைக் குவித்துவிடலாம். சிலிக்கான் பள்ளத்தாக்குப் பகுதியில் உருவாகும் செயற்கை நுண்ணறிவு 'ஸ்டார்ட் அப்'-களின் இலக்கே ராணுவம்தான்.

ஏற்கெனவே, தொழில்நுட்பங்கள்மீது மிகுந்த ஆர்வம் காட்டும் இராணுவத் துறையும் புதிதாக வந்திருக்கும் செயற்கை நுண்ணறிவுத் துறை சார்ந்து பணத்தைச் செலவழிக்கத் தயங்குவதில்லை. ஏற்கெனவே, தங்கள் நிறுவனங்களில் வலைதளம், செயலிகளில் பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்களை இராணுவத்துக்காகச் சிறிதளவு மேம்படுத்திவிட்டால் போதும்.

ஏற்கெனவே கூகுள் நிறுவனம் தானியங்கிச் செயற்கை நுண்ணறிவு. கார்களுக்காக உருவாக்கிவரும் 'கணினி கண்கள்' (Computer vision) அல்காரிதங்களைச் சிறிதளவு மேம்படுத்தினால், தானியங்கி டிரோன்களுக்கு அவற்றைப் பொருத்திவிடலாம். குற்றவாளிகளைக் கண்டறியும் செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்களை அமேசான் நிறுவனம் முன்பே உருவாக்கியுள்ளது. அதைக் காவல் துறைக்கு விற்றுக்கொண்டிருக்கிறது.

கொடுக்கப்படும் தகவல்களிலிருந்தும், ஒரு நபரின் நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் இவர் குற்றவாளியாகவோ தீவிரவாதியாகவோ இருக்கலாம் என்று முடிவெடுக்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் சந்தைக்கு வந்துவிட்டன. 'பிரெடிக்டிவ் போலீஸிங்' (Predictive policing) எனும் இந்த மென்பொருள்களை இராணுவத்துக்கு விற்பது பெரிய காரியமில்லை!

### நிறுவனங்களின் இலாபவெறி

'தீவிரவாதிகளையும் குற்றவாளிகளையும் முன்பே கணித்து அவர்களை ஒழித்துக்கட்டுவதன் மூலம், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம்' - இதுதான் ராணுவத்தினர் முன்வைக்கும் முதல் வாதம். அடுத்தது, செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் வரும்போது இராணுவத்தில் இருக்கும் மனிதர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றலாம் - இது இரண்டாவது வாதம்.

ஆனால், செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்களில் பல சிக்கல்கள் இருப்பதாக விமர்சனங்கள் உண்டு. செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்கள் கறுப்பின மக்களைத் தவறுதலாகக் குற்றவாளிகள் ஆக்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. செயற்கைநுண்ணறிவு அடிப்படையில் கறுப்பின மக்களைத் தவறாகக் கைதுசெய்யும் வழக்குகள் அமெரிக்காவில் அதிகமாகிவிட்டன. இதைத் தொடர்ந்து அமேசான் போன்ற நிறுவனங்களே தங்களின் மென்பொருள்களைத் திரும்பப் பெற்ற வரலாறும் உண்டு.

ஆனால், செல்வாக்குமிக்க இந்த நிறுவனங்கள், இத்தகைய சிக்கல்களைத் தீர்க்காமல் இலாபத்துக்காகத் தவறான செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களை அரசுக்கு விற்பதிலேயே குறியாக இருக்கின்றன. இவற்றை எப்படிச் சரிசெய்வது என்கிற வாதம் நடந்துகொண்டிருக்கும்போது, இதே மென்பொருள்கள் அடிப்படையில் ராணுவத்தில் செயற்கை நுண்ணறிவு நுழைவது மேலும் பல கேள்விகளை எழுப்புகிறது.

நாட்டின் பாதுகாப்பு என்கிற அம்சத்தில் மட்டும் கண்ணை மூடிக்கொண்டு செயற்கை நுண்ணறிவுசார்ந்த போர்க் கருவிகளையும், போர் இயந்திரங்களையும் அனுமதிக்கலாமா? இதைப் பற்றிய விவாதங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன.

இப்போதைய செயற்கை நுண்ணறிவு மனிதனைப் போல முழுமையாகச் சிந்திக்கக்கூடியதோ பொது அறிவு கொண்டதோ அல்ல. அது வெறும் கணித அடிப்படையிலானது மட்டும்தான். கணிதத்தின் அடிப்படையில், கட்டுப்பாடில்லாமல் முரட்டுத்தனமாக இயங்கும் ஒரு தொழில் நுட்பத்திடம் துப்பாக்கியையும் வெடிகுண்டையும் கொடுக்கலாமா?

### மீறப்படும் விதிகள்

அமெரிக்க எழுத்தாளர் ஐசக் அசிமோவ் ரோபாட்களைப் பற்றி எழுதிய சிறுகதை ஒன்றில், சில விதிகளை உருவாக்கினார். இன்றளவும் ரோபாட்களுக்கு அடிப்படையான விதியாக அசிமோவின் விதிதான் கூறப்படுகிறது. அதன் முதல் விதி: மனிதனின் கட்டளைகளை எந்தவிதக் கேள்வியும் கேட்காமல் ஒரு ரோபாட் செய்ய வேண்டும் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது.

இன்றைய ஆட்கொல்லி ரோபாட்களின் அடிப்படையே, அசிமோவின் இந்த விதியை மீறுவதாகத்தான் உள்ளது. 'எந்திரன்' திரைப்படத்தில்கூட, கதாநாயகன் உருவாக்கும் ரோபாட்டை அவர் இராணுவத்துக்குத்தான் பயன்படுத்த விரும்புவார். சொல்லப்போனால், பனிப்போர் காலத்தில் இராணுவத்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையிலே நிதி கொடுத்து உருவாக்கப்பட்டதுதான் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம். அதை நிச்சயம் ராணுவத்தினர் பயன்படுத்தவே முனைவார்கள்.

நம் கேள்வி எல்லாம் அணுகுண்டுக்கு நிகரான அழிவை ஏற்படுத்தும் இந்தத் தொழில்நுட்பத்தைத் தவறான நபர்களும் தீவிரவாதிகளும் கையில் எடுத்தால் என்ன ஆகும்? அழிவுக்கு யார் பொறுப்பு ஏற்பது? மனிதத்தன்மை இல்லாத இந்த ரோபாட்களின் கையில் ஏன் கொலை ஆயுதங்களைக் கொடுக்க வேண்டும்?




# இலங்கையைச் சிதைக்கும் ஊழல்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் வரி செலுத்துவோருக்கு ஊழல் தடுப்பு அறிவிப்பு 24.08.2023 அன்று வெளியிடப்பட்டது.

ஒரு சமூகத்தின் தார்மீக அடித்தளம் வருவாய் நிர்வாகத்தில் ஊழலால் சிதைக்கப்படுகிறது, இது நேர்மையின்மைக்கு வழிவகுப்பதோடு, ஒருமைப்பாட்டிற்கு கலக்கத்தை ஏற்படுத்துகின்றது. இறுதியில் சமூக ஒற்றுமை மற்றும் நம்பிக்கையின் முறிவு ஏற்படுகிறது.

"ஊழலைக் கொல்லாவிட்டால் அது இலங்கையைக் கொன்றுவிடும்" – இலங்கையைச் சிதைக்கும் "ஊழல்" வைரஸ்.

மிக முக்கியமான அரசாங்க வருவாயைப் பாதுகாப்பதற்காக, ஒரு வரி நிர்வாகத்தில் இலஞ்சம் தொடர்பான விஷயங்களை விரைவாகவும் திறமையாகவும் கையாள் வது விரும்பத்தக்கது. வரி நிர்வாகத்தில் இலஞ்சம் வாங்குவதை அகற்ற அல்லது குறைக்கும் முயற்சியில் வரி அதிகாரிகளை குறிவைக்கும் நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருக்காது. ஏனெனில் இது வரி அதிகாரிகள் தாங்களாகவே நடத்தும் ஒன்று அல்ல.

வரி செலுத்துவோர், வரி வல்லுநர்கள் மற்றும் வரி அதிகாரிகள் ஈடுபடும் போது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் அல்லது குறைக்கப்பட வேண்டும் என்றால் இந்தக் குற்றத்தைச் செய்வதைத் தவிர்ப்பதற்கான அவர்களின் விருப்பத்தை ஊக்குவிக்க மூன்று தரப்பினரும் திறம்பட உரையாற்ற வேண்டிய சூழ்நிலை எழுகிறது.

மறுபுறம், இலஞ்சம் சம்பந்தப்பட்ட சம்பவங்களை வரி ஏய்ப்பு வழக்குகளாக வேறுபடுத்தி அறியலாம். ஏனெனில் வரி செலுத்துவோர் தனது வரிப் பொறுப்பை இந்தச் சட்ட விரோத வழியில் குறைக்க / தவிர்க்க வேண்டும். அதே சூழ்நிலையானது வழக்கைத் திறந்தே வைத்திருக்கிறது. ஏனெனில் செலுத்த வேண்டிய வரியின் சரியான அளவு எப்போது வேண்டுமானாலும் மதிப்பிடப்படும். அதாவது, ஒரு மதிப்பீடு செய்யப்படுவதற்கு முன் கடக்கக்கூடிய நேரத்தின் வரம்பு ("டைம் பார்") இலஞ்சம் கொடுப்பதன் மூலம் வேண்டுமென்றே ஏய்ப்புச் செய்வதற்கு பொருந்தாது.

உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் (IRD) சாத்தியமான ஊழல் தொடர்பான நுழைவுப் புள்ளிகளைக் குறைப்பதற்கும் அகற்றுவதற்கும் நோக்கமாகப் பல செயற்திறன்மிக்க நடைமுறைகளைச் செயற்படுத்தியுள்ளது.

ஊழலை ஒழிக்க உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தில் (IRD) பின்வரும் செயலூக்கமான நடவடிக்கைகள் மற்றும் முன் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

I. 0% சகிப்புத்தன்மை: இலஞ்சம் / கோரப்பட்ட இலஞ்சம் உட்பட எந்தவொரு ஊழலையும் பொறுத்துக்கொள்ள முடியாது. அநீதி இழைக்கப்பட்ட தரப்பினர், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் உள்ளிட்ட உரிய அதிகாரிகளிடம் புகார் செய்வதற்கு முன், மொபைல் போன்கள், சிசிடிவி மற்றும் பிற சாதனங்களில் செய்யப்பட்ட ஆடியோ மற்றும் வீடியோ பதிவுகள் மூலம் இத்தகைய ஊழலுக்கான அடிப்படை மற்றும் உறுதியான ஆதாரங்களைச் சேகரிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு (CIABOC) மற்றும் CGIR கூறுகின்றனர்.

II. தொடர்பு முறை (Method of communication):

(a) புகார்களைச் செய்ய விரும்பும் எந்தவொரு நபரும் CIABOC க்கு தொடர்புகொள்வதன் மூலம் புகார் அளிக்க முடியும். ஏனெனில் CIABOC அத்தகைய புகார்களை விசாரிப்பதற்கான தொடர்புடைய அதிகாரியாக செயலாற்ற இருக்கின்றனர். CIABOC ஆல் IRD வளாகத்தில் (தரை தளம்) புகார் பெட்டி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் எந்தப் புகாரும் செய்யக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

(b) CGIR க்கு புகார் அளிக்க, பின்வ




ருவனவற்றைப் பயன்படுத்தக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

I. தபால்: செயலகம், உள்நாட்டு இறை வரித் திணைக்களம், P O Box- 515, கொழும்பு 02

II. மின்னஞ்சல்: cgir@ird.gov.lk

III. தொலைபேசி: +94 112135400

IV. தொலைநகல்: +94112337777

III. குற்றச்சாட்டிற்கான ஆதாரம்: IRD இன் ஊழியர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்கின்ற காரணத்தினால் புகாருடன் பின்வரும் விபரம் கோரப்படுகின்றது.

i. புகார்தாரரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்களுடன் அல்லது

ii. புகார்தாரர் பெயர் தெரியாதவராக இருக்க விரும்பினால் துணை ஆவணங்கள் கொடுக்கபட வேண்டும்.

IV. பாதுகாப்பு உத்தரவாதம்: IRD இன் எந்தவொரு பணியாளருக்கும் எதிரான புகாரின் எந்தவொரு பாதகமான விளைவுகளிலிருந்தும் புகார்தாரரின் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. சக அதிகாரிகளின் எந்த விதமான பழிவாங்கலும் மற்றொரு சக அதிகாரிக்கு எதிராகப் புகார் அளித்தால் பொறுத்துக்கொள்ளப்படாது. மற்றும் அத்தகைய அதிகாரி மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது.

V. தணிக்கை இடைநிறுத்தம் (Suspension of Audit): வரி செலுத்துவோர் தங்கள் நிறுவனத்தின் தணிக்கையை நடத்தும் வரி அதிகாரிக்கு எதிராக உரிமை கோரினால் (உரிமையாளர், பங்குதாரர், இயக்குனர், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் முதன்மை ஊழியர்), தணிக்கை நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படும். உரிமை கோரலைச் செய்த வரி செலுத்துவோருக்கு மற்ற வரி செலுத்துவோரின் அச்சுறுத்தல் குறைவாக இருப்பதாக உணர இது உதவும்.

VI. விசாரணை நடவடிக்கை நியமனம்:

*ஒரு சமூகத்தின் தார்மீக அடித்தளம் வருவாய் நிர்வாகத்தில் ஊழலால் சிதைக்கப்படுகிறது, இது நேர்மையின்மைக்கு வழிவகுப்பதோடு, ஒருமைப்பாட்டிற்கு கலக்கத்தை ஏற்படுத்துகின்றது. இறுதியில் சமூக ஒற்றுமை மற்றும் நம்பிக்கையில் முறிவு ஏற்படுகிறது.*

IRD ஊழியர்களுக்கு எதிராக செய்யப்பட்ட ஊழலினை விசாரணை செய்வதற்கு நேர்மை மற்றும் கடந்தகாலப் பதிவுகளைக் கொண்ட அதிகாரிகள், மற்றும் உள்நாட்டு வருவாய் சேவையிலிருந்து குறைந்த பட்சம் ஓர் அதிகாரியை உள்ளடக்கிய சிறப்புக் குழு குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக ஸ்தாபனச் சட்டத்தின் அடிப்படையில் பூர்வாங்க விசாரணையை நடத்துவதற்கு CGIRஆல் நியமிக்கப்படும்.

VII. முறையான விசாரணை: குற்றச்சாட்டுகள் அனைத்தும் முறையாக விசாரிக்கப்படும். அத்தகைய அதிகாரிக்கு எதிரான முதன்மையான வழக்கு அறிக்கையை சமர்ப்பித்தால் முறையான விசாரணை முடியும் வரை குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி பொதுவான இடத்திற்கு (Poolற்கு) மாற்றப்படுவார்.

VIII. CIABOCக்கு பரிந்துரை: குற்றச்சாட்டில் கணிசமான உண்மை இருப்பதாக குழுவின் 50%க்கும் அதிகமான உறுப்பினர்கள் கருதினால், அத்தகைய வழக்கு CIABOC/PSCக்கு அறிக்கையுடன் அடுத்த நடவடிக்கைக்காக பரிந்துரைக்கப்பட வேண்டும் என்கின்ற முறைமை அமுலுக்கு வரும்.

IX. புகாரின் மீதான நிலைமை/கருத்து (Feedback on the complaint): புகார்தாரர் புகார் அளிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று (3) மாதங்களின் பின் தனது அடையாளத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழல் குற்றச்சாட்டைச் செய்த ஊழியர்களுக்கு எதிராகச் சமர்ப்பித்த குற்றச்சாட்டின் முன்னேற்றத்தை/ நிலையை CGIRஇடம் கோரலாம்.

X. குறைவான மனித தலையீடு: மனித தலையீட்டை முடிந்தவரை குறைப்பதற்கு: பதிவு செய்தல், மின்-தாக்கல், மின்-பணம் செலுத்துதல், IRD உடனான மின்-தொடர்பு போன்ற மின்-சேவைகளின் அதிகபட்சப் பயன்பாடு ஊக்குவிக்கப்படும்.

XI. காட்டுப்பாடற்ற அதிகாரங்களைக் குறைத்தல் (Reduction of discretionary powers): அதிக விருப்புரிமைகள் அதிக ஊழல்களுக்கு வழிவகுக்கும். எனவே, சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அனைவருக்கும் நியாயமாகவும் சமமாகவும் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான நிர்வாகத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்படும்.

XII. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்: ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கும், வரி செலுத்துவோர் விவகாரங்கள் தொடர்பான அனைத்து அறிவுறுத்தல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் - மதிப்பீடுகள், நிர்வாக மதிப்பாய்வுகள், உரிமைகள் மற்றும் கடமைகள் போன்றவை IRDஇன் இணையத்தளத்தில் (www.ird.gov.lk) கிடைக்கும் வகையில் வசதி ஏற்படுத்தப்படும்.

XIII. நேர்மைக்கான ஊக்கம்: இலஞ்சம் வழங்க முயற்சிக்கும் வரி செலுத்துவோர் மீது ஆதாரங்களுடன் புகார் செய்ய ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மற்றும் வருங்காலங்களில் ஊக்குவிக்கப்படுவார்கள்.

"தவறான செயல்களின் ஆயுதக் களஞ்சியத்தில் மிகவும் ஆபத்தான கருவிகள் நல்லவர்களின் அலட்சியமும் அமைதியும் ஆகும். " - மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்.

வரி செலுத்துவோர் வேலைவாய்ப்பு, முதலீடுகள், வணிகங்கள் மற்றும் பிற ஆதாரங்கள் உட்பட எந்தவொரு மூலத்திலிருந்தும் வருமானத்தைப் பெற்ற பின்னர் சரியான வரியைச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அனைத்து நன்மைகளையும் பெறுவதால் செலுத்தவும். இதன் மூலம் இலங்கையின் வளர்ச்சிக்குப் பங்களிக்குமாறு வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# “செய்யும் தொழிலே தெய்வம்”

நேர்கண்டவர் - ஞா.கவினி

காலம் காலமாக பெண்கள் தமது கலை திறன்களினூடும் கை வண்ணங்களினூடும் தத்தமதுதிறமைகளை வெளிக் கொண்டு வருகின்றனர்...அப்படியாக பெண்களின இரசனையோடும அவர்களின் வாழ்வாதாரத்தோடும்ஒன்றித்துப்போய் இருப்பது தையல் தொழிலாகும்.இப்படித் தான் இருபது வருடங்களாகத் தையல் தொழிலில் சிறந்துசெயற்பட்டு, இன்று பல விருதுகளுக்குச் சொந்தக்காரி ஆக இருக்கும் திருமதிசுதாவரன்குமுதினி அவர்களை தமிழர் பொருண்மியம் நேர்கண்டது.

யாழ் கொழும்புத்துறையை வசிப்பிடமாகக்கொண்டவர்குமுதினி. திருமணமான ஆரம்ப காலங்களில் கணவரின் வழி காட்டலில தையல் துறையை தேர்ந்தெடுத்து, அதில் பயிற்சியையும்பெற்றுக் கொண்டிருக்கிறார். கடந்த இருபது வருடங்களாக இந்தத் தொழிலில் தான் நிலைத்து நிற்பதற்கு ஆரம்ப காலத்தில் இருந்தே கரம் கொடுத்து நிற்பது கணவனின் நம்பிக்கைதான் என்கிறார்குமுதினி.

### தொழிலின் தொடக்கப்புள்ளி

ஆரம்பத்தில்எனது கணவனின்உழைப்பில் கொள்வனவு செய்யப்பட்ட சிறிய இரக சிங்கர் தையல் இயந்திரத்தினோடு எனது பயணத்தை ஆரம்பித்தேன். அயலில் உள்ளவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் ஆடைகளை வடிவமைத்து கொடுத்தும், எனது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் வித்தியாசமான ஆடைகளை தைப்பதன் மூலமாகவும் வாடிக்கையாளர்களைக் கண்டுபிடித்தேன். இப்படிச் சிறுக






சிறுகத் தையலை நேசித்தபோது அந்த தொழில் என்னை நேசிக்கத் தொடங்கியது. ஒரே ஒரு சிறிய இயந்திரத்தோடு ஆரம்பித்த எனது தொழில் இன்றைக்கு ஔிதையலகம் என்ற பெயரில் ஐந்துக்கும் மேற்பட்ட ஊழியர்களோடும் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களோடும் வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது. புலம்பெயர்ந்து வாழுகின்ற எமது உறவுகள் கூட அங்கிருந்து தமது துணிகளைப் பொதிசெய்து தையலுக்காக என்னிடம் அனுப்புகின்ற நிலை காணப்படுகின்றது. அன்றைக்கு ஒன்றுமே தெரியாதபோது நான் நேசித்த தொழில் இன்றைக்கு என்னைச் சமூகத்தில் அந்தஸ்துள்ள மனுஷியாக மாற்றி இருக்கின்றது. இன்னும் நான் சந்திக்க வேண்டிய விடயங்களும் சாதிக்க வேண்டிய தூரங்களும் நிறைய இருந்தாலும் இபபோது கிடைத்த வெற்றிகளை எல்லாம் நிறைவாக உணர்கிறேன்.

தையலை எல்லோரும் பழகினாலும், ஒரு சிலரே ஆத்மார்த்தமாக அதனோடு ஒன்றி விடுகின்றனர். எந்தத் தொழிலாயினும் அதனை நேசித்து செய்ய வேண்டும் என்று ஆரம்பத்தில் இருந்தே நான் எண்ணுவதுண்டு. இப்படித்தான் மிகச் சிறிய சிறிய நுட்பங்களையும் தையல்களில இருக்கின்ற பிரச்சினைகளையும்வாய்ப்புகளையும் நான் கண்டுபிடிக்க கூடியதாக இருந்தது.

தையலினைத் தொழிலாக செய்யத் தொடங்கிய ஆரம்ப காலங்களில் மிகவும் படபடப்பும் சிரமமும் இருந்தன. ஆனால் காலப்போக்கில் அதுவே எனக்கு மிகப் பிடித்த தொழிலாக மாறிப் போய்விட்டது. தற்போது ஆடைகளைத் தைத்துக்கொடுப்பதோடு மாத்திரமன்றி துணிப்பைகள்உற்பத்தி செய்வது. ஆடைகளை அழகுப்படுத்தும் ஆரிவேர்க்... போன்றவற்றையும் செய்து கொண்டிருக்கிறேன். இவை தவிர தற்போதுதையல்கலையைமற்றவர்களுக்குபயிற்றுவிக்கும்பணியிலும் என்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறேன். அது மனதுக்கு நிறைவான பணியாக இருக்கிறது. என்னை நம்பி வருகிற பலருக்குத் தையற் கலையின் மூலமாக ஒரு வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு நான் ஆதார சக்தியாக இருக்கிறேன் என்பது ஒரு பெருமை தரக்கூடிய விடயம். தையல்



என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல, அது ஒரு கலை. உங்கள் வாழ்க்கையே மாற்றிப் போடக்கூடிய சக்தியை ஒரு மிகப் பெரிய பலத்தை ஒரு கைத்தொழில் உங்களுக்குக் கொடுத்து விடும். அதிலும் குடும்பத்தினரை விட்டு வெளியே வேலைக்கு போக முடியாத நிலையில் உள்ள பெண்களுக்குத் தையல் என்பது ஒரு வரப்பிரசாதம் என்று தான் சொல்ல வேண்டும். தையல் இயந்திரத்தையும் தையல் தொழிலையும் நான் நேசிக்கத் தொடங்கி இன்றைக்கு இருபதுவருடங்களுக்கு மேலாகிறது. ஆனால் இன்று வரைக்கும் எனக்கு இந்தத் தொழில் மிகவும் ஆத்ம திருப்தியையும்தன்னம்பிக்கையையும் தந்திருக்கிறது.

### சவால்களும் சாதனங்களும்

எல்லோருக்கும் போலவே தொழிலில் பல இடையூறுகளும் போட்டிகளும் நிச்சயமாக இருக்கும். ஆனால் எமது நம்பிக்கையிலும் தொழில் தர்மத்திலும் நிலைத்திருந்தால் நிச்சயமாக எடுத்த காரியத்திலும் நினைத்த தொழிலிலும் வெற்றி பெற முடியும் என்று நம்புகிறேன். அப்படித்தான் எனக்கு ஆரம்பத்தில் தையல் இயந்திரங்கள் கொள்வனவுசெய்வதிலிருந்து இன்று எனது தொழிலுக்கானஅமைவிடத்தை உருவாக்குவது வரை மிகப் பெரும் சவால்கள் தான் என்னைச் சுற்றி இருக்கின்றன. ஆனாலும்அந்த சவால்களை எல்லாம் சமாளித்து முன்னேறிச் செல்லக் கூடிய தைரியத்தையும் நம்பிக்கையையும் ஒரு சொந்தத் தொழில் நிச்சயமாக கொடுக்கும் என்பது எனது அனுபவம். தற்போது ஆடைகளை தைப்பது மாத்திரம் இன்றி பல்வேறுபட்டதுறைகளில் என்னை



இணைத்துக்கொண்டிருக்கிறேன். தையல் தொடர்பான அநேகம் பயிலரங்குகள், போட்டிகள் என்று பலவற்றில் பங்குபெற்றும் வாய்ப்பை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நமக்கு வழங்கி இருக்கின்றன. குறிப்பாகச் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினூடாக நடத்தப்படுகின்ற பயிற்சிகள், சந்தை வாய்ப்புகள் என்பன எமக்கு மிகப் பெரும்பலமாக இருக்கின்றன.

கற்றுக்கொண்டது கொஞ்சம் தான் இன்னும் தேடிக் கற்கவேண்டியது நிறைய இருக்கின்றன. அதற்கான பயிற்சிகளையும் சந்தர்ப்பங்களையும் பலரும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு தொழிலும் இழிவானதில்லை. "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கு இணங்க நாங்கள் செய்கின்ற தொழிலைத் தெய்வமாக நேசித்து போற்றி செய்ய வேண்டும். இந்தத் தையல் தொழிலை நான் நேசித்த காரணத்தினால் தான் இன்று பல விருதுக



ளுக்குச் சொந்தக்காரியாக இருக்கின்றேன். அண்மையில் நடைபெற்ற போட்டி ஒன்றில் பங்கு பற்றி இலங்கையின் ஜனாதிபதியிடம் இருந்து விருதொன்றை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அதனை இட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு இந்த தொழிலைத் குறித்ததான நீண்ட கனவு இருக்கின்றது.

ஒரு சொந்தமான கட்டிடத்தில் இந்த தொழிலை நான் தொடர வேண்டும். இங்கே ஒளி தையலகம் மற்றும் தையல் பயிற்சி அகாடமி ஒன்றையும் நிறுவ வேண்டும் என்று பெரும் கனவு எனக்கு இருக்கிறது. பல பேருக்கு வேலை வாய்ப்பினைவழங்குவதோடு தொழில் பற்றிய அறிவினைப் பலருக்கு கொடுக்க வேண்டும். அவர்கள் சொந்த தொழிலில் நிலைத்து நிற்பதற்கு எங்களுடைய அக்கடமி காரணமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். உண்மையில் வறிய பிரதேச மக்களுக்கு ஒரு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சாதாரணமாகச் சமூகத்தில் தங்கி வாழாத தற்சார்பு நிலையினை அமைக்க வேண்டிய கடப்பாடு எங்கள் எல்லோருக்குமே இருக்கின்றது. அந்த வகையில் முதலாவது எங்களது தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்து கொள்வ



**தையல் என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல, அது ஒரு கலை. உங்கள் வாழ்க்கையே மாற்றி போடக்கூடியசக்தியை ஒரு மிகப்பெரிய பலத்தை ஒரு கைத்தொழில் உங்களுக்கு கொடுத்து விடும். அதிலும் குடும்பத்தினரை விட்டு வெளியே வேலைக்கு போக முடியாத நிலையில் உள்ள பெண்களுக்கு தையல் என்பது ஒரு வரப்பிரசாதம் என்று தான் சொல்ல வேண்டும்.**

தற்கு ஏற்ற வழி வகைகளை தெரிவு செய்யவேண்டும். கிடைக்கின்றநேரங்களைவிரயமாக்காமல் வினைத்திறனோடு செயற்படுவோமானால் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றியை சந்திக்கலாம் என்கிறார் ஒளிநிறுவன உரிமையாளர் சுதாவரன் குமுதினி.





- தமிழ்க்கவி -

# தானம்

## எங்கள் வாழ்வும் வளமும்

"தானத்திலே சிறந்த தானம் நிதானம்" தந்தருள்வாய் உலகில் சரி சமாதானம்" இது ஒரு பழைய பாடல். நிதானமும் சமாதானமும் இழக்கப்படுகின்ற ஒரு தருணம் உண்டு. அதுதான் பசி "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்."

ஒரு காலத்தில் இரட்டைப்புலவர்கள் என இரண்டு புலவர்கள் வாழ்ந்தார்கள். மூத்தவர் முடவர். இளையவர் குருடர். முடவரைத் தன் தோளில் சுமந்து செல்வார் இளையவர். தோளில் இருந்தவாறே செல்லும்பாதையை காட்டிக்கொண்டிருப்பார் இளையவர். புலவர்களுக்கே சொந்தமான வறுமை அவர்களிடம் தாராளமாகவே விளையாடியது. பசி அவர்களை வாட்டிய போது அவர்கள் ஒரு சிவன் கோவிலில் பாடிய ஒரு பாடல் வழமைபோல முதல் ஈரடிகளை ஒருவர் பாட மற்றவர் அடுத்த ஈரடியால் பாடலை முடித்து வைப்பார்.

அந்தப்பாடல்

"தேங்கு புகழ் நாங்மூர் சிவனே அல்லாழியப்பா

நாங்கள் பசித்திருக்க ஞாயமோ என இளையவர் பாட்மூத்தவர் – போங்காணும் கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்

சோறுகண்ட மூளியார் சொல்" என முடித்து வைத்தார்.

இறைவனுக்கே சோறில்லை இதில் நமக்கெப்படி வரும் என்பது கருத்து.

பசியின் கொடுமை பற்றிப் பாடாத புலவர்கள் இல்லை.

"ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்.

இருநாளைக்கேல் என்றால் ஏலாய் என்னோ

இடும்பை கூர் என் வயிறே

உன்னோடு வாழ்தலரிது. எனப் பல மன்னாதி மன்னர்களின் நட்பைக் கொண்டிருந்த அவ்வையாரையே பாட வைத்துள்ளது பசி.

'மானம் குலம் கல்வி வண்மை அறிவுடமை

தானம் தவம் முயற்சி தாளாண்மை – தேனின்

கசிவந்த செல்லியர் மேற் காமுறுதல் பத்தும்

பசி வந்திடப்பறந்து போம்" எதற்கு இவ்வளவு தூரம் நீட்டி முழக்குகிறேன் என்று வியப்பாக உள்ளதா?

மேலே குறிப்பிட்ட பத்தில் ஒன்பதையாவது இழந்து விட்ட சமுதாயமாகத் தமிழ் சமுதாயம் மாறிவிட்டது. பசி வந்ததாலா என்றால் அதுதான் இல்லை. ஒரு வேளை உணவை உண்டு மகிழ்வதாக இருந்தாலும் பரவாயில்லை அந்த உணவில் அப்படி ஒன்றும் புதுமையும் இல்லை. எங்கு போனாலும் எல்லா விழாக்களிலும் காணப்படும் ஒரே வகையான உணவுதான். நீண்ட வரிசையில் காத்திருந்து மெதுவாக மணிக்கணக்கில் நகர்ந்து உணவிருக்கும் மேசையை நெருங்கித் தட்டுகளைத் தமது கைகளில் ஏந்தித் தாமே அள்ளிப்

போட்டுக் கொண்டு அதை உட்கார்ந்து சாப்பிட இடம் தேடி நெருக்கியடித்து இடம் பிடித்து அள்ளி வாயில் அடைந்து கொண்டு.

அதற்கும் மேலாக பாயாசமா? ஐஸ் கிறீமா பீடாவா எது எங்கே என்று அதையும் கைப் பற்றி அடைத்துக் கொண்டு வருவ தற்கு பெயர் விருந்துபசாரம்.

அந்த சமையலை யார் செய்தார். எப்படியான சமையலறை அங்கே வேலை செய்தவர்கள் சுத்தமாக அதைச் செய்தார் களா? என்பதெல்லாம் வேறு விடயம். புரிமாறக் கொண்டு வந்து வைத்திருக்கும் இடம் எப்படிப்பட்டது? என்பதையாவது கவனிக்கிறோமோ.

அண்மையில் யாழ்நகரில் ஒரு நிகழ்வு.

முற்றத்தில் கூடாரம் அமைத்து நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. நிறைந்த மக்கள் கூட்டம். உணவும் அதே போல திறந்த வெளியில் மேசைகளைப் போட்டு பாத்திரங்களை வைத்திருந்தார்கள். வழ மையான விருந்துதான் இரவுணவு நூடில்ஸ் புறொய்லர் கோழிகளின் பொரியல் குழம்பு, எண்ணெய்க் கத்தரிக்காய் பிரட் டல் உருளைக்கிழங்கு பிரட்டல், தக்காளி வெங்காயம் பச்சடி,...எதையாவது விட்டு விட்டேனா? அகில உலகத்திலும் தமிழர் விழாக்களில் இதுதானே உணவு. அப் பளம், வடை வாழைப்பழமும் அதிலேயே. சாப்பிட்டானதும் ஐஸ்கிறீம். குச்சியில் குத்திய பழங்கள் பீடா எல்லாம் இருந்தாலும் அவரவர் விரும்பியதைத் தெரிவு செய்தோம் சாப்பிட்டானதும் கழிப்பறைக்கு வழி கேட்டேன். என்ன ஆச்சரியம் அது பக்கத் திலேயே இருந்தது. ஆக மலசல கூட வாச லிலேயே சாப்பாட்டுப் பந்தி. குழம்பு கொதிக் கிற சத்தத்தைக் கேட்டபடியே மலங்கழிக்க பழகியிருப்பது எவ்வளவு வசதி.

அநுமார் வால் போல நீண்டிருந்த பந்தியில் வரிசைக்குள் நிற்க இயலாமல் அல்லது விரும்பாமல் நான் ஒதுங்கி இருந்தேன். ஆனாலும் அங்கே நான் ஒரு அழைக்கப்பட்ட விருந்தினராக இருந்த மையால் அதன் பொறுப்பில் இருந்தவர் என்னைத் தனியாக அழைத்துச் சென்று வரிசையில் நிற்பதை தவிர்த்தார்.

என்ன நடந்தது எங்களுக்கு ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளின் கடைசியில் எங்கள் வீட்டில் ஒரு விசேடம். அது துக்க நிகழ்வுதான். எனக்கு எட்டு ஒன்பது வய திருக்கும். நிகழ்ச்சிக்கு அயல் வீட்டார் களை அழைக்க அம்மா போனபோது நானும் கூடப்போயிருந்தேன். வீடுவீடாகச் சென்று அழைத்தோம். நிகழ்ச்சி நடப்பதற்கு இருதினங்கள் முன்னதாகவே அயலவர் கள் வந்து வீட்டைத் தயார் செய்வதிலும் பலகாரம் செய்வதிலும் உதவினார்கள் தந்தையுடன் அயலில் உள்ள ஆண்கள் கூடி முற்றத்தில் ஒரு பந்தலைப்போட்டார் கள். அதற்குக் கட்டாடி வெள்ளை வேட்டிக ளையும் சேலைகளையும் கட்டி மெரு கேற்றினார்.

காலையில் பெண்கள் வரும்போது கையில் ஒரு பை கொண்டு வந்தார்கள். அதற்குள் அரிசி, மரக்கறி, தேங்காய் போன்ற பொருட்கள் இருந்தன. அவர்கள் கூடி வீட் டிலுள்ளவர்களுடன் சேர்ந்து சமைத்தார் கள். எல்லா சடங்குகளும் முடிந்ததும் சிலர் சாப்பிடாமல் சென்றார்கள். பலர் சாப்பிட்டார் கள். ஏனென்றால் அவர்களுக்குக் கோவி லுக்கு போக வேண்டியிருப்பதால் அல்லது முக்கிய விரதம் இருப்பதால் துடக்கு வீட்டில் சாப்பிட முடியாதாம் என எனது தந்தை சொன்னார்.

அவர்களும் முப்பத்தொருநாள் கழித்து நாங்கள் செய்யும் நிகழ்ச்சியில் சாப்பிடுவார் கள் என்றார். அப்படியே நடந்தது. எங்கள் அயல் வீட்டிலும் இதே போல ஒரு நிகழ்ச்சி நடந்தபோது அங்கே அனைவரும் சாப்பிட் டார்கள் என்றாலும் சமைத்தபின் தத்தம் வீடுகளுக்குப் போனவர்களை மறுபடி சென்று நாங்கள் சாப்பிட அழைத்தோம். வர முடியாமல் வீட்டில் இருந்தவர்களுக்கு உணவை அனுப்பி வைத்தோம். சாப்பிடு பவர்களுக்கு அம்மா, பாட்டி, மாமி என எங் கள் வீட்டிலுள்ளவர்களே பரிமாறி இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க இதில கொஞ்சமா வைக்கிறன் ஏனுங்கோ சாப்பாடு நல்லா யில்லையோ எனப் பேசிக் கொண்டே பரி மாறினார்கள்.

'அய்யோ அப்பிடியில்லைப்பிள்ளை வயிறு நிறைஞ்சிட்டுது நல்ல சாப்பாடு.



இனி ஏலாது பிள்ளை என மகிழ்ச்சியாக வயிறு நிரம்பச் சாப்பிட்டு சென்றதையிட்டு எங்களுக்கும் மகிழ்ச்சிதான்.

இந்த தானங்களிலெல்லாம் சிறந்த தானம் அன்னதானம்தான் எனப்படுகி றது. எந்தத் தானத்தைப் பெறுபவனும் திருப்தி அடைவதில்லை இன்னும் கொஞ் சம் இருந்தால் நல்லதே என நினைப்பார் கள். ஆனால் போதும் போதும் என்று சொல்லி திருப்தியாக பெறும் தானம் அன்ன தானம் மட்டும்தான். தான தர்மங்கள் செய்து கொண்டாடும் திவசம், அந்தியேட்டி போன்ற துக்க நிகழ்வாயினும், கல்யாணம் புனித நீராட்டு பிறந்த நாள் வைபவங்களி லும் ஆலயங்களில் நடத்தும் வேண்டுதல் களில் கொடுக்கும் அன்னதானங்கள் மிக சிறப்பானவை. நாம் கவனித்து உபசரித்து வழங்கும் இந்தத் தானங்களால் நிகழ்ச்சி யில் முக்கிய நபர்களுக்கு ஆசியும் வாழ்த்

> இந்த தானங்க ளிலெல்லாம் சிறந்த தானம் அன்னதானம் தான். எனப்படுகிறது. எந்த தானத்தைப் பெறுபவனும் திருப்தி அடைவதில்லை இன்னும் கொஞ்சம் இருந்தால் நல்லதே என நினைப்பார்கள். ஆனால் போதும் போதும் என்று சொல்லி திருப்தியாக பெறும் தானம் அன்னதானம் மட்டும்தான்.

தும் பெருகுகின்றன.

ஒருவேளை சோற்றுக்காக வரிசை யில் நிற்பது கேவலம். நான் முதலில் என் மகனைப் பலவந்தமாகப் பிடித்துச் சென்ற இயக்க முகாமுக்கு அவனைப் பார்க்கப் போனபோது அவனுடன் பல சிறுவர்கள் மதிய உணவுக்காகத் தட்டுடன் வரிசையில் நின்றுகொண்டிருந்தனர். அந்தக்காட்சி யில் நான் மனமுடைந்து கதறியழுதேன். சோத்துக்குத் தட்டேந்த வைச்சிட்டாங்களே எனத் திட்டினேன். பின்னொருநாள் நானும் அதே போல நிற்க வேண்டிய கட்டம் வந் தது. அது ஒழுக்க நடவடிக்கை என்பது புரிந்தது. ஆனால் பட்டும் பகட்டுமாக பல இலட்ச ரூபாக்கள் மதிப்புடன் ஒரு திருமண விருந்துக்கு வருபவர் தனது குடும்பத்துக்கு தாராளமாக கவுரவமாக ஒரு உணவு விடுதி யில் அந்த உணவைப் பெற்று உண்ண முடியும். ஆனால் தட்டேந்தி வரிசையில் நிற்கும் கேவலத்தைத் தமிழினம் எப்படி ஏற்றுக் கொண்டது?

பண்பாடு, பழக்க வழக்கம், கலாச்சாரம் எல்லாமே ஒரு கோப்பை சோற்றுக்கு விலை போனது எப்படி? தமக்கு வரும் மொய்ப்பணமே குறியாக விழாவிற்கு அழைப்பவர்களுக்கு வாசலில் நின்று வரவேற்கவும் நேரம் இல்லை. வழிய னுப்பவும் நேரமில்லை. பாவம் எங்களு டைய மக்கள் முகத்துக்கஞ்சி யாடினா குலத்துக்கு ஈனம் என்பதை அறியாமல் எமது மூதாதையரின் கவுரவத்தைக் குழி யில் போட்டுவிட்டார்கள்.



# இலாபம் தரும் கொய்யாப் பயிர்ச்செய்கை

ஆனந்தன்
பிரேம்நாந்
லக்சி பண்ணை



கொய்யா செடியானது ஆரம்ப காலத்தில் வீடு தோட்டங்களிலும், வயலின் வரம்பு களிலும் வளர்க்கப்படும் மர வகையாக இருந்து வந்தது.

தற்போது தான் பல விவசாயிகள் இலங்கையில் வர்த்தக நோக்கத்திற்காக உற்பத்தி செய்கின்றார்கள். மெக்ஸிகோ நாட்டில் உள்ள கல்வில்லோ நகரம் தான் கொய்யாவின் பிறப்பிடமாக கருதப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கல்வில்லோ நகரில் நடக்கும் கொய்யாக் கண்காட்சி உலகப்புகழ்பெற்றதாகும்.

வர்த்தகநோக்கங்களுக்காக இந்தியா, சீனா, தாய்லாந்து, மியான்மர் நாடுகளில் அதிகம் வளர்க்கப்படுகிறது.

தற்பொழுது இலங்கையிலும் கொய்யாப் பயிர்ச்செய்கை சடுதியாக அதிகரித்திருக்கின்றது.

கொய்யா செடியானது ஆரம்ப காலத்தில் வீட்டுத் தோட்டங்களிலும், வயலின் வரம்பு களிலும் வளர்க்கப்படும் மர வகையாக இருந்து வந்தது.

தற்போது தான் பல விவசாயிகள் இலங்கையில் வர்த்தக நோக்கத்திற்காக உற்பத்தி செய்கின்றார்கள்.

வர்த்தக நோக்கத்திற்காக பயிரிடுவதாக இருந்தால் ஹைபிரிட் இரகங்களை தேர்ந்தெடுத்து நடவு செய்ய வேண்டும்.

**பயிரிடும் முறை**

கொய்யாவில் பல இரகங்கள் உள்ளது அதில் அலகாபாத். லக்னோ - 46. லக்னோ - 49. பனாரஸ், ரெட்பிளஷ். அர்கா அமுல்யா. அர்காமிருதுளா, ஆகிய இரகங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து நடவு செய்ய வேண்டும்.

ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் கொய்யா நடவு செய்வதற்கு ஏற்ற மாதங்கள் ஆகும்.

செம்மண், கரிசல்மன், களிமண் இருவாட்டி மண், நிலங்களில் கொய்யா நன்கு வளரும் தன்மை கொண்டது.

மணல் மான், உவர் மண், சதுப்பு நிலங்கள் போன்ற இடங்களில் வளராது.

பயிரிடத் தேர்வு செய்யப்பட்ட நிலத்தை நன்கு உழவு செய்ய வேண்டும். பின்பு 15 அடி இடைவெளியில் ஒன்றரை அடி நீள, அகல, ஆழம் உள்ள குழிகளை எடுக்க வேண்டும்.

ஓர் ஏக்கருக்கு 170 கொய்யாக் கன்றுகள் வரை நடலாம்.

பின்பு ஒவ்வொரு குழிக்கும் 10 கிலோ தொழுஉரம், மக்கிய உரம், அல்லது மண்புழு உரம் இட்டு மேல்மண் கலந்த கலவை கொண்டு குழியை மூட வேண்டும். பாலிதீன்பையில் அல்லது தொட்டியில் உள்ள செடிக்கு எவ்வித சேதமும் ஆகாமல் எடுத்துக் குழியின் மத்தியில் நட வேண்டும். மிக உயரமான நாற்றுகளாக இருந்தால், அதன் அருகே இரண்டு காய்ந்த



குச்சிகளை நட்டு, கொய்யாச் செடியையும் குச்சியையும் இணைத்துக் கட்ட வேண்டும்.

நாற்று நடவு செய்தவுடன் குழி முழுவதும் நனைந்து, மண் இறங்கி இறுக்கம் அடையும் அளவுக்கு தண்ணீர் விட வேண்டும். பின்பு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். அதன்பின் மண்ணின் ஈரத்தன்மையைப் பொறுத்து 2 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும்.

### உரங்கள் இடும் முறை

மார்ச், அக்டோபர் மாதங்களில் ஒவ்வொரு மரத்திற்கும். தொழுஉரம் அல்லது ஆட்டு எரு 10 கிலோ, மண்புழு உரம் 2 கிலோ. ஒவ்வொரு 6 மாதத்துக்கும் 2, 3 அடி வட்டப் பாத்தியில் இட வேண்டும்.

இரசாயன உரம் போட விரும்புபவர்கள் அரை கிலோ தழை, மணி, சாம்பல் சத்து உள்ள இரசாயன உரங்களைக் கலந்து மரத்தின் வெளி வட்டத்தில் குழி எடுத்து ஒரு கூடை தொழு எருவுடன் கலந்து போட்டு மண் மூடித் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

கொய்யா செடிகளை பொறுத்தவரை நோய்த்தாக்கம் மிகக் குறைவாக இருக்கும் சில நேரங்களில் மாவு பூச்சி, இலைச்சுருல் போன்ற பிரச்சினைகள் வரும். இதனை கட்டுப்படுத்த இயற்கை கிருமி நாசினியான கற்பூரக் கரைசல் அல்லது மூலிகை கரைசல் அல்லது அக்கினி அஸ்திரா போன்ற கரைசலைப் பயன்படுத்தலாம்.



### கொய்யாச் செடிகளை நிர்வாகம் செய்தல்

செடியைச் சுற்றி களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். களைகளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு அதனை நீக்க வேண்டும். செடியின் அடி பாகத்தில் குறுக்கும் நெடுக்குமாகத் தோன்றும் கிளைகளை நீக்க வேண்டும். மேல்நோக்கி நீண்டு வளரும் கிளைகளின் நுனியைக் கிள்ளி எடுத்து பக்கவாட்டு கிளை வளர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும். இல்லையெனில் கிளைகள் இல்லாமல் செங்குத்தாக வளரும்.

செடிகள் நட்டு 11/2 வருடத்திலிருந்தே காய் பிடிக்க ஆரம்பித்து விடும்.

காய்கள் சற்றுப் பெரிதாக வரும் சமயத்தில் காய்களை சுற்றி பாலித்தீன் அல்லது கடதாசி கொண்டு சுற்றி கட்டி விட வேண்டும்.

அப்போதுதான் சேதமில்லாத பழங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த முடியும்.

பூத்ததிலிருந்து 5 மாதங்கள் கழித்துக் கனிகளை அறுவடை செய்யலாம்.

ஒரு ஹெக்டருக்கு 25 டன் வரை விளைச்சல் கிடைக்கும். ஊடுபயிராகக் குறைந்த வயதுடைய அவரை, கத்தரி ஆகியவற்றை கொய்யா கிளைகள் வரும் வரை வளர்க்கலாம்.

கொய்யாப் பழங்களை அறுவடை செய்ய முன்பு ஓரிரு வியாபாரிகளை நம்பாமல் பல வியாபாரிகளோடு தொடர்பினை ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டும்.




காரணம் கொய்யாப் பழங்களை கொள்வனவு செய்யும் வியாபாரிகள் சிறிய அளவிலேயே கொள்முதல் செய்வார்கள்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

**Ph: 0770239784**
**WhatsApp:0769196445**
**ஆனந்தன்பிரேம்நாத், லக்சி பண்ணை**

## வளரும் வடக்கு:

# உணவுத் தேவையில் தன்னிறைவு நோக்கிய பயணம்

ஜெகன் அருளையா



2003 இல்தனது முதலாவது தொழிலை ஆரம்பிக்கும்போது கே. சுகந்தனுக்கு 21 வயது மட்டுமே. தோல்விகண்ட சமாதான ஒப்பந்தத்தின் மத்தியில் (2002-2006) இலங்கையின் இனப்போர் புழுங்கிக் கொண்டிருந்த காலப்பகுதியில் கொழும்பு புறக்கோட்டைச் சந்தையில் அவர் தனது சிறு கடையை ஆரம்பித்தார். நெருக்கமான கடைகளுக்கும் தெருவோரச் சாவடிகளுக்கும் பெயர்போன புறக்கோட்டைத் தெருவொன்றில் சமையலுக்குப் பாவிக்கும் பலவகை எண்ணைகளை விற்பதே அவரது தொழில். இன்று வரை அது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இலங்கையில் தேங்காய் எண்ணை, பாம் எண்ணை, எள்ளெண்ணை போன்ற எண்ணைகளுக்குப் பெரும் கிராக்கி இருக்கிறது. சமையல் மட்டுமல்ல வெதுப்பகம் உட்பட்ட பல்வேறு வகையான உணவுகளின் உற்பத்தி, ஐஸ் கிரீம், செயற்கை வெண்ணெய்க் கட்டி (மார்ஜெறீன்) ஆகியவற்றின் தயாரிப்பிலும் இவ்வெண்ணைகள் பாவிக்கப்படுகின்றன. இலங்கையின் பாவனைக்கே இவ்வெண்ணைகள் போதாத நிலை.

சிறீலங்கா ஃபைனான்சியல் ரைம்ஸ் ஆகஸ்ட் 2023 பதிப்பின்படி இலங்கை மக்களின் வருடாந்தப் பாவனையான 264,000 மெற்றிக் தொன் பாம் எண்ணையில் 20% மட்டுமே இலங்கையில் தயாரிக்கப்படுகிறது. சில சமயங்களில் இதன் விலை தொன் ஒன்றுக்கு US$1,000 க்கு மேல் போகிறது. பாம் எண்ணைக்கு மட்டும் (இதர எண்ணைகளை விட்டு) இலங்கை வருடத்துக்கு US$264 மில்லியன், அதாவது இன்றைய பண மாற்று விகிதத்தில் ரூ. 85 பில்லியன் செலவிடுகிறது. ஒப்பீட்டளவில் 2023 இற்கான பல்கலைக் கழக மானிய ஒதுக்கீடு: ரூ.60 பில்லியன் (சம்பளம்), ரூ. 6 பில்லியன் (கட்டிடம், உபகரணம்).

எமது நாட்டில் நடைபெறும் பல முட்டாள்தனமான நடவடிக்கைகளில் ஒன்று நாங்கள் பெருந்தொகையான இறக்குமதி செய்யும் சமையல் எண்ணைக்கான மூலப்பொருட்களை நாமே தான் ஏற்றுமதி செய்கிறோம். இவ்வெண்ணைத் தயாரிப்புக்கான விதைகளை உற்பத்தி செய்வதற்காக எமது விவசாயிகளுக்குக் கிடைக்கும் சன்மானம் வெகு சொற்பமானது. அதே வேளை எமது விதைகளைக் கொண்டு வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் எண்ணைகளை அமெரிக்க டொலர்களில் பெரும் விலை கொடுத்து நாம் இறக்குமதி செய்துகொள்கிறோம்.

பாலுணவு, இறைச்சி, வெங்காயம், உள்ளி போன்றவற்றின் இறக்குமதியில் ஊழல் எப்படிக் கோலோச்சுகிறது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். தேநீரில் கலந்திருக்கும் பாலை மட்டுமே அறிந்திருக்கக் கூடியவர்களை இவ்வூழல் பண்ணை வியாபாரங்கள் கோடீஸ்வரர்கள் ஆக்கியுள்ளன. சமீப காலங்களில் உக்ரைன் போரின் காரணமாக ஏற்பட்ட தானிய ஏற்றுமதி முடக்கம் கோழித்தீன் விலையை உயர்த்திவிட்டது. இதனால் உள்ளூர் கோழிப் பண்ணைத் தொழில்கள் முடக்கப்பட்டு முட்டை, இறைச்சி ஆகியவற்றின் விலைகள் வானளாவ உயர்ந்துள்ளன. யாழ்ப்பாணத்தின் றோயல் மாவாலையைப் போன்ற சில நிறுவனங்கள் கோழித்தீன் உற்பத்தியில் ஈடுபட்டாலும் உள்ளூர்ப் பாவனையைச் சமாளிக்க இவை போதாது. சுயநலங்களை முன்வைத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உணவில் தன்னிறைவை எய்துவதற்கு குந்தகமாக இருப்பது மட்டுமல்லாது இறக்குமதிக்குத் தேவையான டொலர்களையும் வற்றச் செய்கின்றன. 80 வீதமான பாம் எண்ணை இறக்குமதி செய்யப்படுவது உள்ளூர் எண்ணை உற்பத்திக்கான தேவை எத்துணை அவசியம் என்பதனையே காட்டுகிறது.



### சுகந்தனின் தொழில் முயற்சி

2022இல் நடைபெற்ற பொருளாதாரச் சரிவோடு கொண்டுவரப்பட்ட இறக்குமதித் தடைக்கு முன்னர் சுகந்தன் மலேசியாவிலிருந்து மாதமொன்றுக்கு 500 தொன் சுத்திகரிக்கப்படாத பாம் எண்ணையை இறக்குமதி செய்து யாழ்ப்பாணத்தில் அதைப் பதப்படுத்தினார். 2016 இல் கே. குலேந்திரன், ஜோகலிங்கம், ஜனநாயகம் ஆகியோரை உள்ளிட்ட குழுவுடன் அவர் அச்சுவேலி தொழிற்பேட்டையில் வெங்க



டேஷ்வரா ஆக்றோ இன்டஸ்றீஸ் என்ற பெயரில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தார்.

மேற்கு மாகாணத்தில் உணவு பதப்படுத்தும் தொழிலில் மூன்று தசாப்த அனுபவத்தைக் கொண்ட குலேந்திரன் ஒரு மொறட்டுவப் பல்கலைக்கழகப் பட்டதாரி. சுகந்தனின் முதலீட்டுடனும் முகாமைத்துவத்துடனும் இக் குழு இத் தொழிற்சாலையை வடிவமைத்துக் கட்டி முடித்தனர். அச்சுவேலி தொழில் வலயத்தில் இத் தொழிற்சாலை இப்போது இயங்கி வருகிறது. தென்னிலங்கையில் பணியாற்றிய தன் மூலம் குலேந்திரன் தனது தொழிலை வளர்த்துக்கொண்ட ஒரு சாதனையாளர்.

இதை எழுதிக்கொண்டிருக்கும்போது அவருக்கு 53 வயது. அவரது இரண்டு பிள்ளைகள் கொழும்பு, மொறட்டுவ பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கிறார்கள். மும்மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற அவர் இப்போது வடக்கிற்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார். இரு மொழி பேசும் சுகந்தனையும் ஒரு மொழி மட்டுமே பேசும் என்னையும் ஆங்கிலத்தால் பாலமிணைக்கும் குலேந்திரனுக்கு நான் நன்றி சொல்லவேண்டும்.

உலக வங்கியின் ஆதரவுடன் 2016 இல் சுகந்தனின் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டது. பிற ஆலைகளால் பாரம்பரிய முறைகளில் மூலப்பொருட்கள் 80% பிழியப்பட்டு எண்ணை அகற்றப்பட்ட பின்னர் வீசப்படும் கழிவுகளைச் சுகந்தன் வாங்கிக் கொள்கிறார். அவரது ஆலையின் இயந்திரங்கள் இக் கழிவுகளை மேலும் நசுக்கி எண்ணையைப் பிழிந்தெடுக்கின்றன.

விலங்குகளுக்கு உணவாக மிகவும் சொற்ப விலைக்கு விற்கப்படுவதற்குப் பதிலாகச் சுகந்தன் மூலம் ஆலைக்காரர் தமது கழிவுகளை அதிக விலைக்கு விற்று இலாபமீட்டுகின்றனர். சுத்திகரிக்கப்படாத எண்ணையைச் சேமித்து வைக்கவென 1,000 தொன் கொள்ளளவுள்ள சேமக்கலமொன்று இருக்கிறது. இன்னுமொரு பெரிய கலமொன்றில் அரிசித் தவிடு, நசுக்கப்பட்ட தேங்காய் / கொப்பறா, எள்ளுக் கட்டிகள் போன்ற திண்மப் பொருட்கள் சேமிக்கப்படுகின்றன.

200 kVA மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சூரியத் தகடுகளால் வேயப்பட்ட 60,000 சதுர அடி கட்டிடத்தில் நாளொன்றுக்கு 25 தொன் சுத்திகரிக்கப்பட்ட எண்ணை உற்பத்தி செய்யப்படுகிறது. 75 பணியாட்கள் இங்கு வேலை செய்கிறார்கள். தவிட்டிலிருந்து எண்ணையை வடித்தெடுக்கும் தேவைக்கென இன்னுமொரு ஆலைக்கான கட்டுமானம் நிறைவேறும் நிலையில் இருக்கிறது. இலங்கையில் தவிடு பெருமளவில் கிடைக்கிறது.

இன்ஸ்டிடியூட் ஒஃப் பொலிசி ஸ்ரடீஸ் (Institute of Policy Studies) என்னும் ஆய்வு நிறுவனத்தின் அறிக்கைப்படி 2022 இல் மேற்கொள்ளப்பட்ட உர இறக்குமதித் தடைக்கு முன்னர் இலங்கையில் வருடமொன்றுக்கு 4 மில்லியன் முதல் 5 மில்லியன் தொன் நெல் விளைவிக்கப்பட்டது. இதிலிருந்து 80,000 தொன் தவிட்டு எண்ணை உற்பத்தி செய்திருக்க முடியும் (நிறைப்படி நெல்லில் 8% தவிடு தவிட்டில் 20% எண்ணை).

தவிடு என்பது அரிசிக்கும் உமிக்குமிடையில் இருக்கும் ஒரு போர்வை. அரிசி ஆலைகளில் இது கழிவுப் பொருளாக வீசப்படுகிறது. பொரித்தல், வதக்குதல், வெதுப்புதல் மற்றும் மருத்துவ தேவைகளுக்குத் தவிட்டெண்ணை பாவிக்கப்படுகிறது. இது முற்றுமுழுதாக உள்ளூர் விவசாயத்தின் கழிவுப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சிற்சிறு மாற்றங்களுடன் வடித்தெடுக்கும் இச்செயல்முறை மூலம் சோயா விதை, சூரியகாந்தி விதை போன்ற பல எண்ணைத் தன்மை கொண்ட விதைகள், புண்ணாக்குகள் போன்றவற்றிலிருந்து எண்ணையைப் பிரித்தெடுக்க முடியும். வடக்கிலுள்ள சுகந்தனின் வடி ஆலை உட்பட இலங்கையில் நான்கு ஆலைகள் மட்டுமே உள்ளன எனகிறார் சுகந்தன்.

வருடத்தில் 9 மாதங்களுக்கு, விலை மலிவாக இருக்கும்போது அரிசி ஆலைகளிலிருந்து தவிட்டை வெங்கடேஷ்வரா நிறுவனம் கொள்முதல் செய்து சேமித்து வைக்கிறது. மீதி 3 மாதங்களில் அதைப் பாவித்து எண்ணை உறப்த்தியைச் செய்கிறது. இதிலிருந்து நாளொன்றுக்கு 20 தொன் தவிட்டெண்ணையையும் கழிவிலிருந்து விலங்குணவாக 80 தொன் பிண்ணாக்கையும் இவ்வாலை தயாரிக்கிறது. தவிட்டை வாங்குவதிலிருந்து எண்ணை மற்றும் விலங்குணவு விற்பனை நிறைவேற 60 நாள் பிடிக்கிறது என்கிறார் சுகந்தன். உள்ளூர் தவிட்டை மட்டுமே கொள்முதல் செய்வதனால் இறக்குமதிக்கான டொலர் தேவைப்படுவதில்லை.

## வியாபாரப் போட்டிகள்

மிகவும் போட்டியான சூழலில் சுகந்தன் தொழில் செய்யவேண்டி இருக்கிறது. விவசாயம், மீன்பிடித் தொழில் துறைகளில் இதுபோன்ற கதைகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். வடக்கில் மட்டுமல்ல முழு இலங்கையிலுமே இதுதான் நிலை. மாம்பழம், வெங்காயம், நண்டு போன்ற பண்டங்களுக்கும் இதுவே நிலை. நாட்டின் பெரிய நிறுவனங்கள் இப்பண்டங்களுக்கு உற்பத்தியாளர்களுக்கு அதிக விலைகளைக் கொடுத்து வாங்கிக்கொண்டு போய் விடுகின்றன.

வருமானம் முடக்கப்பட்டிருக்கும்போது விவசாயிகளும், மீனவர்களும் சொற்ப இலாபங்களுக்காக உள்ளூர் ஆலைகளைத் தவிர்த்து பெரும் தேசிய நிறுவனங்களுக்குத் தமது உற்பத்திகளை விற்கத் தலைப்படுகின்றனர். இதனால் உள்ளூர் ஆலைகள் மூடப்படவேண்டி ஏற்படுகிறது. உள்ளூர் போட்டிகள் ஒழிக்கப்பட்ட நிலையில் பெரும் தேசிய நிறுவனங்கள் தமது கொள்முதல் விலையை வேண்டுமென்றே குறைத்து, சிலவேளைகளில் உற்பத்தி விலைக்கும் குறைவாகக் கொடுத்து, கொள்முதலைச் செய்கிறார்கள். இதனால் விவசாயிகளும் மீனவர்களும் தொடர்ந்து தமது தொழில்களில் முதலீடு செய்வதற்கோ அல்லது தமதும் தமது குடும்பங்களினது வாழ்வாதார மேம்பாட்டுக்கோ போதுமான பணமின்றி வாடும் நிலை ஏற்படுகிறது.

ஆலையொன்றை நடத்துவதென்பது மிகவும் செலவு மிக்க காரியம். அதிக முதலீடு செய்தால் உற்பத்தி அதிகமாகி இலாபமும் அதிகரிக்கும். இறக்குமதி செய்யப்படும் பண்டங்களால் உள்ளூர் உற்பத்திகள் அதிக இலாபத்தைப் பெற்றுத் தருவதில்லை. இலாபம் குறைவாக இருப்பினும் மிதமான உற்பத்தி ஓரளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கின்றது. இருப்பினும் இப்படியான ஆலைகளைக் கட்டியெழுப்ப முயல்பவர்கள் முதலீட்டுக்காக வங்கிகளையோ தனியார் முதலீட்டாளர்களையோ நாடவேண்டி ஏற்படுகிறது.


தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிச் சூழலில், குறிப்பாக டொலர் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை போன்ற பல்வேறு அழுத்தங்களினால் இலங்கை திண்டாடும் போது இதிலிருந்து மீள்வதற்கு உள்ளூர் ஆலைகளே முக்கியத் தேவையாக உள்ளன. இதே வேளை தமது பணத்தை மீளப்பெறுவதில் உத்தரவாதமற்ற நிலையில் வங்கிகள் சிறிய வியாபார முயற்சிகளுக்கு கடன் கொடுக்கத் தயங்குகின்றன. அத்தோடு மிகவும் உயர்ந்த, நிலையற்ற வட்டி வீதத்தினால் கடனைப் பெற்றவர்களும் அதை மீளச் செலுத்துவதற்குச் சிரமப்படுகிறார்கள். நாடு விரைவில் தன்னிறைவு எய்துமெனப் பலரும் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் வெகு சிலரே அதற்காக உழைக்கிறார்கள்.

**தமிழாக்கம்: சிவதாசன்**

**நன்றி - மறுமொழி**

# இந்திய உபகண்டத்து எருமைகளின் கதை





Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

**உற்பத்தியாகும் எருமைப் பாலை நீண்டநாட்களுக்கு கெடாமல் வைத்திருக்க வேண்டுமெனில் அதனை மாவாக்க வேண்டும் என்ற நிலையில் அதற்குரிய தொழில் நுட்பம் அன்றைய நாளில் இருந்திருக்கவில்லை. உலகளாவியரீதியில் பசும் பாலுக்கே மாவாக்கும் தொழில் நுட்பம் இருந்தது. எருமைப்பாலிலுள்ள அதிகரித்த கொழுப்பு வீதம் இதற்கு இடையூறாக இருந்தது.**

உலகில் இந்திய உபகண்டத்து நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஸ் ஆகிய நாடுகளில் தான் உலகின் 90-95% க்கு அதிகமான எருமைகள் உள்ளன.

இந்த நாடுகளில் இருந்துதான் உலகின் 95% ற்கு அதிகமான எருமைப் பால் உற்பத்தி நிகழ்கிறது. இந்திய உபகண்டம் முழுவதும் பல்வேறு வகையான எருமை இனங்கள் இருந்தாலும் இந்தியாவின் வடக்கு, வடமேற்கு, பாகிஸ்தான் பகுதிகளில் தான் அதிக பால் உற்பத்தி செய்யும் எருமைகள் உள்ளன. இந்தியாவின் மூரா, சூர்தி, ஜப்ரபாதி, இந்திய- பாகிஸ்தானின் நிலிரவி, பாகிஸ்தானின் குந்தி போன்ற இனங்கள் கணிசமான அளவு பாலைத் தரக் கூடியன.

மூரா, நிலிரவி போன்ற இனங்கள் பொருத்தமான சீதோஷ்ண நிலை மற்றும் தரமான மேலாண்மை கிடைக்கும் போது 15 லீட்டர் வரை பாலைத் தரக் கூடியன. தமிழக பகுதிகளில் தோடா, பர்கூர் போன்ற பாலுற்பத்தி குறைந்த எருமை இனங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கர்நாடகாவில் எருமைகளைக் கொண்டு நடத்தப்படும் "கம்பாலா" போட்டி மிகப் பிரபலமானது. காந்தாரா படத்தில் இது தொடர்பான காட்சிகள் வருகின்றன. இந்த வகை எருமைகளும் பாலுற்பத்தி குறைந்தவை.

பாலுற்பத்தி குறைந்த எருமைகள் விவசாய தேவைகளுக்கும், போக்குவரத்துக்கும், இறைச்சிக்கும் பயன் படுகின்றன. இலங்கையின் உள்ளூர் எருமைகளும் பாலுற்பத்தி குறைந்தவையே. எழுபதுகளில் உள்ளூர் எருமைகளை மல்சிரிபுர போன்ற தேசிய கால்நடைச் சபைப் பண்ணைகளில் (NLDB farms) வைத்து இந்திய மூரா, நிலிரவி, சூர்தி இனங்களைக் கொண்டு தரமுயர்த்தியிருந்தனர்.

இன்றும் அந்த எருமைகளின் பரம்பரைகள் இலங்கையில் உள்ளன. இன்றைய திகதியில் பசுக்களைப் போல் இல்லாது விடினும் மூரா, நிலிரவி இனங்களின் விந்தணுக் குச்சிகளின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு செயற்கை முறைச்சினைப் படுத்தல் நிகழ்கிறது. எனினும் வெற்றி வீதம் மிக மிகக் குறைவு. இன்று இலங்கையில் 0.3 மில்லியன் வரையான எருமைகள் உள்ளன.

2017 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின் அடிப்படையில் உலகின் மொத்த எருமைப் பால் உற்பத்தியில் (100 மில்லியன் மெற்றிக் தொன்) இந்தியா 70 மில்லியன் மெற்



றிக் தொன்னையும் பாகிஸ்தான் 25 மில்லியன் மெற்றிக் தொன்னையும் வருடாந்தம் உற்பத்தி செய்கின்றன. இந்தியாவில் 113 மில்லியன் எருமைகளும் பாக்கிஸ்தானில் 43.7 மில்லியன் எருமைகளும் சீனாவில் 23 மில்லியன் எருமைகளும் உள்ளன. (உலக மொத்த எருமைகள் 201மில்லியன்). பாகிஸ்தானின் மொத்த பால் உற்பத்தியில் 60% வரை எருமைகளில் இருந்தே கிடைக்கிறது. இந்தியாவின் பாலுற்பத்தியில் கிட்டத்தட்ட 50% எருமைப் பாலில் இருந்தே பெறப்படுகிறது.

அறுபதுகளில் இந்திய வெண்மைப் புரட்சியின் தந்தை வர்க்கீஸ் குரியன் குழுவின் மிகப் பெரிய கண்டுபிடிப்பான எருமைப் பாலில் இருந்து பால் மா தயாரித்தல் இந்திய பால் பண்ணைத் துறையை ஒரு படி உயர்த்தியது எனலாம். இன்று இந்தியாவின் பால்பண்ணைத் துறை உலகில் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அத்திவாரமிட்ட முக்கிய காரணிகளில் ஒன்றாக இந்த எருமைப் பால் மா புரட்சியைச் சொல்ல முடியும்.

உற்பத்தியாகும் எருமைப் பாலை நீண்டநாட்களுக்கு கெடாமல் வைத்திருக்க வேண்டுமெனில் அதனை மாவாக்க வேண்டும் என்ற நிலையில் அதற்குரிய தொழில் நுட்பம் அன்றைய நாளில் இருந்திருக்கவில்லை. உலகளாவியரீதியில் பசும் பாலுக்கே மாவாக்கும் தொழில் நுட்பம் இருந்தது. எருமைப்பாலிலுள்ள அதிகரித்த கொழுப்பு வீதம் இதற்கு இடையூறாக இருந்தது.

பல உள்ளூர், வெளிநாட்டு நிறுவனங்களிடம் இது தொடர்பாகத் தொழில் நுட்ப உதவிகளைக் குரியன் கேட்ட போதும் பலன் பூச்சியமே. இறுதியில் பல தோல்விகளுக்கு பிறகு அதற்குரிய நுட்பத்தை கண்டறிந் னர். பாலின் கொழுப்பைப் பிரித்தெடுத்து இந்த வெற்றியைக் கண்டனர். இந்தப் புள்ளிதான் இந்திய பாகிஸ்தான் நாடுகளின் பால் பண்ணை துறையை உயர்த்தியது எனலாம். நெஸ்லே போன்ற பல்தேசிய கம்பனிகள் இன்று வரைக்கும் இந்திய சந்தையை நெருங்க முடியாமல் இருக்க இந்திய பால் கூட்டுறவுத்துறை மட்டுமல்ல இந்திய எருமைகளும் அவற்றின் மூலம் உருவாகிய பால் உற்பத்தித் தொழில் நுட்பமும்தான் காரணம்.

# சிலைகளைச் செதுக்கி சாதிக்கும் அஜந்தா

**நான் பாடசாலையில் பத்தாம் தரத்தில் படிக்கும் போது இதனைக் கற்றுக்கொண்டேன். அப்போது கண்காட்சி களிலும் இவற்றை வைத்திருக்கின்றோம். அப்பாதான் என்னை அதற்கு அழைத்துச் சென்றிருந்தார். இதற்காக அப்பாவுக்கு நான்கு தடவை ஜனாதிபதி விருது கிடைத்தது. நான் இதனை மேலும் கற்றுக்கொண்டு இப்போது மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கின்றேன்**



- தேசியன் -

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி மிகவும் சிறப்பாக இடம்பெற்ற அதேவேளையில், பெருந்தொகையான பார்வையாளர்களும் இதனால் பயன்பெற்றிருந்தார்கள். கண்காட்சிக் கூடங்களை அமைத்திருந்தவர்களின் விற்பனையும் பெருமளவுக்கு இடம்பெற்றிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. இந்தக் கண் காட்சியில் அப்பம் சுடுவதற்கான இயந்திரம் உட்படப் பல இயந்திரங்கள் மக்களைக் கவர்ந்த நிலையில், உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியும் அதிகமாக இருந்தது.

வடக்கிலிருந்து மட்டுமன்றி தென்பகுதி யிலிருந்தும் பல நிறுவனங்கள் தமது கடைகளைப் பரப்பியிருந்தன. அதனை விடத் தனிநபர்கள் சிலரும் தென்பகுதியிலிருந்து வந்து தமது உற்பத்திகளை, கலைப் படைப்புக்களைக் கண்காட்சியில் விற்பனைக்காக வைத்திருந்தார்கள். இவ்வாறு தென்பகுதியிலிருந்து வந்து தனது கலைப் படைப்பைக் கண்காட்சியில் வைத்திருந்த அஜந்தா என்ற பெண்மணி எம்மைக் கவர்ந்தார். கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டுள்ள அஜந்தா, கொழும்பில் – கல்கிசையில் தனது விற்பனை நிலையத்தை நடத்திவருகின்றார்.



மரத்தினாலான அழகிய சிலைகளை அவர் செய்கின்றார். கொழும்பில் அவரது கலைப்படைப்புக்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது. கல்கிசை – கோவில் வீதியில் அவரது விற்பனைக் கூடம் அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணக் கண்காட்சியிலும் பார்வையாளர்களைக் கவர்ந்த ஒரு காட்சிக் கூடமாக அவரது நிலையம் இருந்தது. அங்கிருந்த இராவணன் சிலை பலரையும் கவர்ந்த நிலையில், பிஸியாக விற்பனையில் ஈடுபட்டிருந்த அவருடன் பேசினோம்.

**கேள்வி -** இந்தத் துறைக்குள் நீங்கள் எவ்வாறு வந்தீர்கள்?

**பதில் -** எங்களுடைய அப்பாவிடமிருந்து தான் இதனைக் கற்றுக்கொண்டேன். அப்பாதான் முன்னர் இதனைச் செய்துகொண்டிருந்தார். எனக்கும் அவர் இதனைக் கற்றுத் தந்தார்.

நான் பாடசாலையில் பத்தாம் தரத்தில் படிக்கும்போது இதனைக் கற்றுக்கொண்டேன். அப்போது கண்காட்சிகளிலும் இவற்றை வைத்திருக்கின்றோம். அப்பாதான் என்னை அதற்கு அழைத்துச் சென்றிருந்தார். இதற்காக அப்பாவுக்கு நான்கு தடவை ஜனாதிபதி விருது கிடைத்தது.

நான் இதனை மேலும் கற்றுக்கொண்டு இப்போது மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கின்றேன். என்னுடைய மாணவர்களும் நன்றாகச் செய்கின்றார்கள். அவர்கள் தாம் செய்பவைகளையும் விற்பனை செய்வதற்காக என்னிடம் தருவார்கள்.

**கேள்வி -** உங்களிடம் எத்தனை மாணவர்கள் இப்போது கற்கின்றார்கள்?

**பதில் -** சுமார் 20 மாணவர்கள் என்னிடம் படிக்கின்றார்கள். அவர்களில் பலர் என்னைவிடவும் சிறப்பாக இதனைச் செய்கின்றார்கள். அவர்கள் தாம் செய்தவற்றை என்னிடம் தருவார்கள். அவர்கள் என்னைவிடவும் சிறப்பாகச் செய்வது எனக்கு மிகுந்த சந்தோசம். அவர்களை இத்துறையில் நான் மேலும் ஊக்கப்படுத்தி வருகின்றேன்.

**கேள்வி -** உங்களுடைய இந்தத் தொழில்துறையை எவ்வாறு மேம்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள்?

**பதில் -** இதனை இன்னும் முன்னேற்ற வேண்டும். இதில் இளைஞர்கள், யுவதிகளுக்கு அதிகளவுக்கு வேலைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். என்னைப் பொறுத்தவரையில் ஏற்றுமதி – இறக்குமதி வியாபாரம் ஒன்றை நான் நடத்திக்கொண்டிருக்கின்றேன். அதனால், இந்தத் தொழில்துறையை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரும் ஒரு துறையாக மாற்றுவதுதான் என்னுடைய நோக்கம். அதற்காக அவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றேன்.

**கேள்வி -** யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு உங்களுக்கு ஏற்பட்டது?

**பதில் -** நாட்டில் நடைபெறும் கண்காட்சிகள் அனைத்துக்குமே கலந்துகொள்ளுமாறு எனக்கு அழைப்பு வரும். அதேபோல, எனது முகநூல் பக்கங்களிலும் அஜந்தா வாருங்கோ! இதற்கு நீங்கள் கட்டாயம் வரவேண்டும் என நண்பர்கள் பலர் அழைப்பார்கள். அப்படித்தான் இந்த யாழ்ப்பாணக் கண்காட்சியிலும் கலந்துகொள்ள வேண்டும் என பலரிடமிருந்து அழைப்பு வந்தது. அதனால்தான் கலந்துகொள்கின்றேன்.

# மிச்சம் பிடித்தால் தான்.....




வேதநாயகம்
தபேந்திரன்



“நாய்க் களஞ்சியம் “ நாம் அன்றாடம் பயன்படுத்தும் மின் உபகரணங்களில் ஒன்றுக்கு ஓரிடத்தில் இப்படியொரு பட்டப் பெயர் உண்டு.

முழு இலங்கையும் 2018 ஆம் ஆண்டு இறுதியுடன் மின் ஊட்டப்பட்டு விட்டது. அதாவது எல்லோருக்கும் மின்சாரம் என்ற இலக்கு அடையப்பட்டு விட்டது. மின்சாரம் பாவிக்கும் வீடுகளில் மிகப் பெரும்பாலானோரிடம் பிறிட்ஜ் எனப்படும் குளிர்சாதனப்பெட்டி இருக்கிறது.

இந்தப் பிறிட்ஜ்க்குத் தான் “நாய்க் களஞ்சியம்” என்ற பட்டப்பெயர் வைக்கப் பட்டுள்ளது.

வீட்டில் சமைத்து மிஞ்சிய உணவு, சமைக்காத உணவுப் பொருள், தண்ணீர்ப் போத்தல் என எல்லாமே இந்தப் பிறிட்ஜ்க் குள் அடையப்பட்டு விடுகிறது.

சமைத்த உணவுகள் பல நாள்களாகப் பிறிட்ஜ்னுள் கிடந்து ஒரு புதுமணம் மணக்கத் தூக்கி எறிவார்கள்.

பெரும்பாலும் நாய் பூனைகளுக்கே உணவாகும். அதனால் தான் பிறிட்ஜை “நாய்க் களஞ்சியம்” என அந்த அன்பர் பெயர் வைத்துள்ளார்.

பழைய சாப்பாட்டை வைத்து மிச்சம் பிடிக்க நினைக்கிறோம். ஆனால் மாறாகத் தான் நடக்கிறது.

ஒரு பிறிட்ஜினுள் எவ்வளவுக்கு எவ்வளவு பொருள்களை அடைகின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு மின்சாரத்தை உறிஞ்சி அது வேலை செய்யும்.

எவ்வளவுக்கு எவ்வளவு அடிக்கடி பிறிட்ஜைத் திறந்து மூடுகின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு மின்சாரத்தை உறிஞ்சும். ஏனெனில் பிறிட்ஜ்ஜின் குளிர் நிலை வெளி வெப்பத்தால் தாக்கப்படக் குறைந்து போகும். அதனால் மின்சாரத்தை உட்கொண்டு குளிர்நிலை கூடும்.

ஆகவே ஒரு நாளைக்கு பிறிட்ஜை இரு முறை அல்லது மும்முறை திறந்து தேவையான பொருள்களை எடுத்து, உள்வைக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அது போலத் தேவையற்ற பொருள்களை நீக்கிப் பிறிட்ஜின் சுமையைக் குறைக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் மின்பாவனைக் கட்டணத்தைக் குறைக்கலாம். எமது நாட்டில் வீட்டு மின் அலகுப் பாவனை 90 யூனிட்டுகளைத் தாண்டும்போது கட்டணம் எகிறிப் பாயும்.

பிறிட்ஜ் பாவனை தொடர்பான விழிப்புணர்வு சரியாக இருந்தால் மின்பாவனைக் கட்டணத்தைக் குறைக்கலாம்.

உடுப்புகளை அயன் பண்ணி உடுத்தும் பழக்கம் பலரிடம் உள்ளது. ஒவ்வொரு நாளும் காலை, இரவு அயன் பண்ணும் பழக்கம் பரவலாக உள்ளது. இது தவறான ஒரு பழக்கமாகும். ஏனெனில் உங்களது நேரமும் விரயமாகும்.

நாளாந்தம் உடுப்புகளை அயன் பண்ணும்போது அயன்பொக்ஸ் சூடாகுவதற்கு நேரம் எடுக்கும். அவ்வாறு ஒவ்வொரு நாளும் அயன்பொக்ஸ் சூடாகும்போது மின்மாணி வேகமாக ஓடி நிறைய யூனிட்டுகளைக் கடந்து விடும்.

ஆகவே உடுப்புகளை வாரத்தின் இறுதி நாள் ஒன்றைத் தெரிவு செய்து ஒரேயடியாக அயன்பண்ணுவது மின்கட்டணச் சிக்கனத்தையும் நேரச் சிக்கனத்தையும் தரும். உடனே அயன் பண்ணி உடுத்துவது அழகு தான்.

ஆனால் இன்றைய விலைவாசியில் குடும்பச் செலவில் கணிசமான ஒரு பங்கை மின்கட்டணம் எடுக்கிறது.


அதில் பெரும் பங்கை பிறிட்ஜ்ம், அயன்பொக்சும் எடுக்கின்றன. அதனைக் கட்டுப்படுத்தினால் வாழ்க்கைச் செலவைக் குறைத்து எஞ்சும் பணத்தைச் சேமிக்கலாம் அல்லது போசாக்கு உணவுக்காகச் செலவழிக்கலாம்.

அது போலத் தேவையற்ற இடங்களில் மின் குமிழ்களை ஒளிர விடுதல், மின் விசிறிகளைச் சுழல விடுதல், கிணற்றுத் தண்ணீரை இறைக்கும் மின்மோட்டார் போன்றவற்றைக் கட்டுப்பாடாகவும் திறமையாகவும் பாவிப்பதன் மூலமாக மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கலாம்.

இது தனி ஒருவரால் மட்டும் ஆகக் கூடியதல்ல. ஒரு குடும்பத்தின் கூட்டு உழைப்பாகும். அது போல அரச, தனியார், பொது நிறுவனங்களில் பணி புரிவோரும் தமது வீடு போல மின்சாரச் சிக்கனத்தைப் பேணுவோமாயின் மின்கட்டணத்தைக் குறைக்கலாம்.

எமது வீட்டைப் போல நாட்டையும் நேசிப்போமாயின் தனி ஒருவரது பொருளாதாரமும் தேசியப் பொருளாதாரமும் உயரும்.

# பிரையன் டிரேசி சொல்லும் வெற்றிக்கான 5 உத்திகள்




**“எத்தனை முறை தோல்விகள் வந்தாலும், போர்க்களத்தில் உங்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதைப் பிறர் உணரச் செய்யுங்கள். தைரியத்தோடு முன் சென்று போரிடுங்கள். முன்னேற, முன்னேறத் தடைகள் விலகும். வழிகள் தோன்றும். ஆம்.. நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம்”**

உலகின் மிகச் சிறந்த தன்முனைப்பு எழுத்தாளர்களில் குறிப்பிடத்தகுந்தவர், பிரையன் டிரேசி (BRIAN TRACY). அவர் எழுதிய EAT THAT FROG, THE PSYCHOLOGY OF SELLING, THE POWER OF SELF-DISCIPLINE போன்ற நூல்கள் உலகப் புகழ் பெற்றவை. ‘வெற்றிக்கான ஐந்து உத்திகள்’ என்ற தலைப்பில் அவர் சமீபத்தில் எழுதிய கட்டுரையில் இருந்து சில குறிப்புகள், உங்களுக்காக....

**1. தெளிவு (CLARITY) -**

உங்கள் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதை நீங்கள் யாரையும் தேடிச் சென்று ஆலோசனை கேட்க வேண்டியதில்லை. வெற்றி பெற்ற மனிதர்கள் எல்லாம் தங்கள் எதிர்காலத்தை தாங்களே தீர்மானிக்கிறார்கள். அதை நிகழ்த்தியும் காண்பிக்கிறார்கள். எனவே ‘உங்கள் இலக்கு என்ன ?’ அல்லது ‘நீங்கள் என்ன ஆக விரும்புகிறீர்கள்?’ என்கிற முடிவை முதலில் எடுங்கள்.

முடிவுகள் எடுக்கிறபோது அதுசரியாக இருக்குமா என்று நீங்கள் ஐயப்படத் தேவையில்லை. வெற்றியாளர்கள் எப்போதும் சரியான முடிவுகளை எடுப்பதில்லை. அவர்கள் எடுக்கிற முடிவைச் சரியாக்கிக் காண்பிக்கிறார்கள்.

**2. திறன் (COMPETENT) -**

உங்கள் இலக்குகளை அடைவதற்கான திறன்களை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். திறன்களைக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. திரும்பத், திரும்பத், திரும்ப.. அதைச் செய்து பழகி, அதில் நிபுணத்துவம் பெற வேண்டும். நாளொன்றுக்குப் பதினாறு மணி நேரம் பிராக்டீஸ் செய்ததால் தான் விராட் கோலி என்கிற ஆளுமை உருவாக முடிந்தது. இந்த உலகம், துறை சார்ந்த நிபுணர்களை எப்போதும் தேடிக் கொண்டே இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**3. கவனம் (CONCENTRATION)-**

மொத்தமே இரண்டு சதவீத மக்கள்தான் எடுத்த காரியத்தைக் கவனம் சிதறாமல் செய்து முடிக்கிறார்கள் என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இலக்கை நிர்ணயிப்பது எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியமானது, அதில் கவனம் செலுத்தி,




அதனை நிறைவேற்றுவது. கவனம் செலுத்தினால் மட்டும் போதாது. அதில் ஒரு வேகமும் இருக்க வேண்டும். பட்டறிவைப் பயன்படுத்தி விவேகத்தோடும் செயல்பட வேண்டும். தோல்விகள் வரத்தான் செய்யும். அதிலிருந்து கற்றுக்கொண்டு தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

**4. அர்ப்பணிப்பு (COMMITMENT)-**

அர்ப்பணிப்பு உணர்வு இல்லாமல் எந்த வெற்றியையும் பெற முடியாது. உங்களுக்குப் பிடித்த சில விஷயங்களை தியாகம் செய்ய வேண்டி இருக்கலாம். சொகுசு வட்டத்திலிருந்து வெளியே வந்து களமாட வேண்டி இருக்கலாம். வெற்றி பெறும் வரை எல்லாவற்றுக்கும் தயாராகுங்கள். இது ஒரு போர்க்களம். வெற்றி பெற்றவருக்கு மட்டுமே இங்கு மணிமகுடம் சூட்டப்படும்.

**5. நம்பிக்கை (CONFIDENCE)-**

தோல்வி என்பது ஒரு நாணயத்தின் இரண்டாவது பக்கம் மாதிரி. பல நேரங்களில் தவிர்க்க இயலாதது. ஆனால் தோல்வியுற்ற போதெல்லாம், வெற்றியாளர்கள் மீண்டும் வெறிகொண்டு எழுந்து சாதித்திருக்கிறார்கள். 100 சதங்கள் அடித்த மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கூட, 34 முறை டக் அவுட் ஆகி - உலகின் அதிக முறை டக் அவுட் ஆனவர்களின் பட்டியலில் இடம் பெற்றவர்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

எத்தனை முறை தோல்விகள் வந்தாலும், போர்க்களத்தில் உங்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை பிறர் உணரச் செய்யுங்கள். தைரியத்தோடு முன் சென்று போரிடுங்கள். முன்னேற, முன்னேற தடைகள் விலகும். வழிகள் தோன்றும். ஆம்.. நீங்கள் வெற்றி பெறுவது நிச்சயம்!



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

முந்திச் சமயம் எண்டால் என்ன? சமய வழிபாடு எண்டால் என்ன? சமய வாழ்க்கை எண்டால் என்ன? என்ன என்ன எண்டு கே பீ சுந்தராம்பாள் மாதிரி எங்கடை ஆச்சி அடிக்கடி என்னட்டையும் அப்புவிட்டையும் கேள்வி கேப்பா. எங்கடை ஆச்சியைப் பொறுத்தவரைக்கும் சக மனிசனை மனிச னாக பாக்கிறதுதான் சமயம். அவனை மதிக்கிறதுதான் சமய வழிபாடு. அவனை வாழவைப்பதே சமய வாழ்க்கை. பசிச்சவ னையும், இருக்க வீடில்லாமல் இருக்கிற வனையும், உடுக்கத் துணி இல்லாதவ னையும், படிக்க வசதி வாய்ப்பு இல்லாத வனையும், உள்ளம் உடைஞ்சவனை யும்,உடம்பு உடைஞ்சவனையும், உறவு களைத் துலைச்சவனையும் மனிசனா கப் பாக்க வேணும். அவனை மதிக்க வேணும் அவன் வாழ முடிஞ்ச உதவிக ளைச் செய்ய வேணும் எண்டுவா ஆச்சி.

எவனொருத்தன் தன்னட்டை இருக்கிற படிப்பு, பதவி, பணம், செல்வாக்கைப் பாவிச்சு இதுகள் எல்லாத்தையும் செய்யி றானோ அவன் தான் உண்மையான சமய வாதி. அவன் தான் உண்மையான ஆன்மீக வாதி. அவன்தான் உண்மையான சமய வாழ்க்கை வாழுறவன் எண்டுவா ஆச்சி. உண்ணான உணவுக்காகவும், உடைக்காவும், உறையுளுக்காகவும், உறவுக்காவும், உதவிக்காகவும் ஏங்குகிற சக மனிசனைப் புறக்கணிச்சுப் போட்டு அவனுக்கு உதவாமல் சும்மா மதச் சின் னங்களை உடம்பு முழுக்க அணிஞ்சு



கொண்டு கடவுள் நாமத்தை உச்சாடனம் செய்து கொண்டும், திருவிழாக்களை நடத்திக் கொண்டும், சமய ஊர்வலங் களை நடத்திக் கொண்டும், சமய மகாநாடு களை நடாத்திக் கொண்டும் இருகிறது உண்மையான சமய வாழ்வு இல்லை எண்டது அவவின்ரை வாதம் .

உப்பிடி உதவி தேவைப்படுகிற மனிச ருக்கு தேவையான நேரத்திலை தேவை யான உதவியளைச் செய்யாமல் சமய விழிப்புணர்வை ஊட்டலாம், சமயத்தை வாழ வைக்கலாம் , சமயத்தை வளர்க்க லாம், சமய மாற்றத்தை மறுக்கலாம் எண்ட தெல்லாம் ஒருக்காலும் நடக்காது. உண் மையில சமயத்தின்ரை பெயரால

உறவுக் காவும், உதவிக்காகவும் ஏங்குகிற சக மனிசனுக்கு உதவி செய்யிறதன் மூலமே அவனை வாழ வைப்பதன் மூலமே சமய விழிப்புணர்வை ஊட்ட லாம், சமயத்தை வாழ வைக்கலாம், சம யத்தை வளர்க்கலாம், சமய மாற்றத்தை மறுக்கலாம் எண்டது அவவின்ரை கருத்து.

ஊத்தை உடுப்போடையும் பசிச்ச வயித் தோடையும் வந்த எத்தனயோ ஏழை பாழையளை உள்ளுக்கு விடாத சமய மகாநாடுகளையும், கோயில்களையும், அன்னதான மடங்களையும் என்ரை சீவியத்தைலை நிறையப் பாத்திருக்கிறன் எண்டுவார் அப்பு . உள்ளமும் உடலும் உடைஞ்ச எத்தினையோ சீவன்களை கண்டும் காணாமலும் போன சமய ஊர்வலங்களையும் சாமி ஊர்வலங்க ளையும் பாத்திருக்கிறன். பசிக்குது எண்டு கை ஏந்திறவனை கண்டும் காணாமலும் போய் கோயில் வழியை அருச்சினை செய்யிறவை யையும் ஆராதனை செய்யிற வையையும் பாத்திருக்கிறன் எண்டுவார் அவர் .

பசிச்சவனை வைச்சுக் கொண்டு சமயம் பரப்ப முடி யாது, சமய விழிப் புணர்வு ஊட்ட முடியாது, சமயத்தை வளர்க்க முடியாது எண்டு விளங்கின படியாலைதான் திருநாவுக்கரசரும் திரு ஞானசம்பந்தரும் இறைவ னிட்டை படிக்காசு வேண்டி பசிச்சவன்ரை பசியை ஆத்தினவை. உதாலதான் கண் டியோ ஆறுமுக நாவலர் கஞ்சித் தொட்டியளை அறிமுகப்படுத்தினவர் எண் டுவா ஆச்சி. ஏழைகளின்ரை சிரிப்பில இறைவனைக் காண முயற்சிக்காத ஏழை களிலை அன்பு செலுத்தாத எந்தச் சமயமும் சமயமில்லை. அதுக்காக முயற்சிக்காத ஒருத்தரும் சமய வாதியுமில்லை. அப்பிடிக் கொத்த ஆக்களின்ரை வாழ்க்கை சமய வாழ்க்கையுமில்லை . அவட்டையளாலை சமயத்தை பரப்ப முடியாது, சமய விழிப்பு ணர்வு ஊட்ட முடியாது, சமயத்தை வளர்க்க முடியாது சமய மாற்றத்தை மறுக்க முடி யாது எண்டு அடிச்சுச் சொல்லுவா ஆச்சி.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2023இல் வெளியிடப்பெற்றது.

தமிழர் பொருண்மியம்
வாரமலர் TAMILS ECONOMY



புதன்கிழமை
13.09.2023

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்




**மின் பொறியியல் நிபுணர்**
**தகைமை** : இளங்கலை பட்டம்
**அனுபவம்** : 10 வருடம்
**மேலதிகத் தகைமை:** இலங்கை பொறியியலாயர் நிலைய நிறுவன உறுப்பினர்
**விண்ணப்பிக்கும் முறை :** dmgv.2023@gmail.com எனும் இணையத்தள முகவரிக்கு சுயவிபர கோவையை அனுப்பவும்.

**இயந்திரப் பொறியியல் நிபுணர்**
**தகைமை** : இளங்கலைப் பட்டம்
**அனுபவம்** : 10 வருடம்
**மேலதிகத்தகைமை :** இலங்கை பொறியியலாயர் நிலைய நிறுவன உறுப்பினர்
**விண்ணப்பிக்கும் முறை :** dmgv.2023@gmail.com எனும் இணையத்தள முகவரிக்கு சுயவிபர கோவையை அனுப்பவும்.

**மின் பொறியியலாளர்**
**தகைமை** : இளங்கலைப் பட்டம்
**அனுபவம்** : 05 வருடம்
**மேலதிகத்தகைமை :** இலங்கை பொறியியலாயர் நிலைய இணை உறுப்பினர்
**விண்ணப்பிக்கும் முறை :** dmgv.2023@gmail.com எனும் இணையத்தள முகவரிக்கு சுயவிபர கோவையை அனுப்பவும்

**இயந்திரப் பொறியியலாளர்**
**தகைமை** : இளங்கலை பட்டம்
**அனுபவம்** : 05 வருடம்
**மேலதிகத்தகைமை :** இலங்கை பொறியியலாயர் நிலைய இணை உறுப்பினர்
**விண்ணப்பிக்கும் முறை :** dmgv.2023@gmail.com எனும் இணையத்தள முகவரிக்கு சுயவிபர கோவையை அனுப்பவும்.

**சைனீஸ் உணவு தயாரிப்பாளர்**
**நிறுவனம்** : Banana leaf family restaurant
**பணியிடம்** : கொழும்பு
**அனுகூலம் :** உணவு, தங்குமிடம், மேலதிக கொடுப்பனவுகள் கவர்ச்சிகரமான சம்பளம்
தொடர்புகளுக்கு : 0114961460, 0117203845, 0701223101 0724557437

**கொத்து தயாரிப்பாளர்**
**நிறுவனம்:** Banana leaf family restaurant
**பணியிடம்** : கொழும்பு
**அனுகூலம் :** உணவுதங்குமிடம், மேலதிக கொடுப்பனவுகள் கவர்ச்சிகரமான சம்பளம்
**தொடர்புகளுக்கு:** 0114961460, 0117203845, 0701223101, 0724557437

**சமையலறை உதவியாளர்**
**நிறுவனம்:** Banana leaf family restaurant
**பணியிடம்** :கொழும்பு
**அனுகூலம்** :உணவு, தங்குமிடம், மேலதிக கொடுப்பனவுகள் கவர்ச்சிகரமான சம்பளம்
**தொடர்புகளுக்கு** : 0114961460, 0117203845,0701223101, 0724557437

**பழச்சாறு தயாரிப்பாளர்**
**நிறுவனம்:** Banana leaf family restaurant
**பணியிடம்:** கொழும்பு
**அனுகூலம்:** உணவுதங்குமிடம், மேலதிகக் கொடுப்பனவுகள், கவர்ச்சிகரமான சம்பளம்
**தொடர்புகளுக்கு** : 0114961460,0117203845, 0701223101, 0724557437

**சமையல்காரர்**
**நிறுவனம்:** Banana leaf family restaurant
**பணியிடம்** :கொழும்பு
**பால்** : ஆண்
**அனுகூலம்:** உணவு, தங்குமிடம், மேலதிக கொடுப்பனவுகள் கவர்ச்சிகரமான சம்பளம்
**தொடர்புகளுக்கு** : 0114961460, 0117203845, 0701223101, 0724557437

**துப்பரவுப் பணியாளர்**
**நிறுவனம்** :Banana leaf family restaurant
**பணியிடம்:** கொழும்பு
**அனுகூலம்:** உணவு, தங்குமிடம், மேலதிக கொடுப்பனவுகள் கவர்ச்சிகரமான சம்பளம்
தொடர்புகளுக்கு : 0114961460, 0117203845, 0701223101, 0724557437

**விற்பனையாளர்**
**நிறுவனம்** : Independent Trading
**பணியிடம்** : கொழும்பு
**பால்** : இரு பாலாரும்
**முகவரி:இல -** 51/1 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11
**தொடர்புகளுக்கு:** 0779046514, 0112422943

**கணக்காளர்**
**நிறுவனம்:** Independent Trading
**பணியிடம்:** கொழும்பு
**பால்:** பெண்
**முகவரி:** இல - 51/1, குறுக்குத்தெரு, கொழும்பு - 11
**தொடர்புகளுக்கு:** 077 9046514, 011 2422943

**வாகனசாரதி**
**பணியிடம்:** மதினாகொட, ராஜகிரிய
**தொடர்புகளுக்கு** : 0777366586

**பணியாளர்**
**நிறுவனம்:** Independent Trading
**பணியிடம்:** கொழும்பு
**பால்:** பெண்
**முகவரி** : இல - 51/1ம் குறுக்குத்தெரு கொழும்பு - 11
**தொடர்புகளுக்கு** : 0779046514 0112422943

**பணியாளர்**
**நிறுவனம்** : Sweet toffee
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0750333249 0775333249

**சவர்மா பண் (bun) தயாரிப்பாளர்**
**நிறுவனம்** : Sweet toffee
**தொடர்புகளுக்கு** : 0750333249 0775333249

**அப்பம் கொத்து தயாரிப்பாளர்**
**நிறுவனம்** : சம்பத் உணவகம்
**பணியிடம்** : மாகொல கிரிபத் கொட
**தொடர்புகளுக்கு** : 0112963901 0753669370

**விற்பனையாளர்**
**நிறுவனம்** : ஆடையகம்
**பணியிடம்** : வெள்ளவத்தை, கொழும்பு
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0741779394

**பணியாளர்**
**நிறுவனம்** : கோழி இறைச்சி சொசேஜஸ் உற்பத்தி நிலையம்
**பணியிடம்** : நிட்டம்புவ
**பால்** : ஆண்
**வயதெல்லை** : 18 - 45
**சம்பளம்** : 45000 இற்கு மேல்
**அனுகூலம்** : உணவு தங்குமிடம்
**தொடர்புகளுக்கு** : 0777355722, 0711442816, 0760278428, 0787477229

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY
11
புதன்கிழமை
13.09.2023

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்

JOB VACANCY

**மேசன், உதவியாளர்**
**சம்பளம்** : மேசன் - 3500
உதவியாளர் - 2500
**தொடர்புகளுக்கு** : 0743617968

**பெயின்டர்**
**சம்பளம்** : 3000
**தொடர்புகளுக்கு** : 0743617968

**மாபிள் வேலையாளர்**
**சம்பளம்** : 3500
**தொடர்புகளுக்கு** : 0743617968

**மேசன், உதவியாளர்**
**காலம்** : 2 வாரங்களுக்கு
**பணியிடம்** : ஜெயவர்த்தன கல்லூரி (தலங்கம பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ) பத்தரமுல்லை
**சம்பளம்** : மேசன் : 3500
உதவியாளர் : 3000
**தொடர்புகளுக்கு** : 0113486637
0770089963

**தச்சன்**
**பணியிடம்** : கிரிஉல்ல
(பட்டறையில் தங்கியிருந்து வேலை செய்தல்)
**தொடர்புகளுக்கு** : 0777153799
0726468399

**மேசன் / உதவியாளர்**
தொடர்புகளுக்கு : 0723312461
0766861090

**மேசன்**
**பணியிடம்** : கண்டி
**தொடர்புகளுக்கு** : 0702517254
0750916277

**மட்பாண்ட வேலை பயிற்றுவிப்பாளர்**
**பணியிடம்** : கண்டி
**தொடர்புகளுக்கு** : 0702517254
0750916277

**வீட்டுப்பணிப்பெண்**
**பணியிடம்** : கடவத்த கிரில்லவல
**பால்** : நடுத்தர வயது பெண்
**சம்பளம்** : 35000
**தொடர்புகளுக்கு** : 0711103564
0778322325

**தொழில்நுட்ப வல்லுநர்கள்/ வெல்டிங் பணியாளர்**
**பணியிடம்** : பாணந்துறை
**தொடர்புகளுக்கு** : 0756033503

**வெல்டிங் பணியாளர்**
**தொடர்புகளுக்கு** : 0760406017

**வெல்டிங் உதவியாளர்**
**தொடர்புகளுக்கு** : 0760406017

**அலுவலப் பணியாளர் / உதவியாளர்**
**தகைமை** : கணினி அறிவு
**தொடர்புகளுக்கு** : 0112362910

**பாதுகாவலர் / காவலாளர்**
**பணியிடம்** : கோனா பொல வீட்டு தொகுதி
**அனுகூலம்** : 50 ஷிப்டுகளுக்கு மேல்
**சம்பளம்** : நாளொன்றுக்கு 1200
**தொடர்புகளுக்கு** : 0767710062, 0717834600, 0712054600

**வீட்டு பணிப்பெண்**
சமையல் தெரிந்த பணிப்பெண்
**வயது** : 25 தொடக்கம் 50
**சம்பளம்** : 35,000தொடக்கம் 40,000
அனுகூலம், தங்குமிடம், உணவு வழங்கப்படும். இஸ்லாமிய வீடு
**தொடர்புகளுக்கு** : 0779966852

**விற்பனையாளர்**
ஆடை விற்பனையாளர்கள்
**பணியிடம்** : வெள்ளவத்தை, கொழும்பு
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0741779394

**தொழில்நுட்பவியலாளர்**
எலக்ட்ரானிக் உபகரணத் திருத்துனர்
**நிறுவனம்**: Penguin toys and novelties pvt ltd
**தொடர்புகளுக்கு** : இரண்டாம் மாடி பென்குயின் சென்டர் 106- 2 /1 பிரின்ஸ் வீதி, கொழும்பு 11
**E-mail** - info@penguintoys.lk

**வரவேற்பாளர்**
**நிறுவனம்**: Penguin toys and novelties (pvt) ltd
**தகைமை** : க.பொ த உயர்தரம்
தமிழ், சிங்கள ஆங்கில அறிவு
**வயது** : 24
**தொடர்புகளுக்கு** : இரண்டாம் மாடி பென்குயின் சென்டர் 106- 2/1பிரின்ஸ் வீதி, கொழும்பு 11
E-mail - info@penguintoys.lk

**முகாமையாளர்**
**நிறுவனம்** : சுமங்கலி ரெஸ்ட்
**பணியிடம்** : வெள்ளவத்தை, கொழும்பு
**வயது** : 65 க்கு உட்பட்டவர் ஓய்வு பெற்றவர்கள்
**பால்** : இரு பாலாரும்
**தொடர்புகளுக்கு**: 0112504413/15/16

**விற்பனையாளர்**
**நிறுவனம்** : Penguin toys and novelties (pvt) ltd
**தகைமை** : க. பொ.த.சாதாரண தரம்
**வயது** : 24
**பால்** : இருபாலாரும்
**விண்ணப்பிக்கும் முறை** : தபால் மூலம் / நேரடியாக
**தொடர்புகளுக்கு** : இரண்டாம் மாடி பென்குயின் சென்டர், 106- 2/1, பிரின்ஸ் வீதி, கொழும்பு 11
E-mail - info@penguintoys.lk

**மேசன்**
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**தொடர்புகளுக்கு**: 0775989475, 0710198518, 0726444264

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
**நிறுவனம்** : இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்
**பணியிடம்** : பிரதான அலுவலகம், புல்மோட்டை
**தகைமைகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்** :
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பட்டம்
**அனுபவம்** : ஒரு வருடம்
**உள்வாரி விண்ணப்பதாரிகள்** :
சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பட்டம்
**அனுபவம்** : கனிஷ்ட முகாமைத்துவச் சேவையில் ஐந்து வருடம்
**விண்ணப்பிக்கும் முறை** : தபால் மூலம்
**முகவரி** : தலைவர்
இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட், 341/21, சரண மாவத்தை, ராஜகிரிய.
**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி** :
23 செப்டம்பர் 2023

**உதவிக் கணக்காளர்**
**பணியிடம்** : கொழும்பு
**பால்** : பெண்
**தகைமை** :
க.பொ.த. உயர்தரத்தில் வணிகக்கல்வி, ஆங்கில அறிவு
கணக்கியல், இறக்குமதி VAT tax, இதர tax சம்பந்தமான இரண்டு வருட அனுபவம்
**சம்பளம்** : 40,000
**அனுகூலம்** : OT, ETF, EPF
**தொடர்புகளுக்கு** : 0776133168
Whatsap : சுயவிவரக் கோவை

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY

புதன்கிழமை
13.09.2023

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்

### சிவில் பொறியியலாளர்

**நிறுவனம் :** இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்
**பணியிடம் :** புல்மோட்டைப் பொறித் தொகுதி - 01
**தகைமை :**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**
பொறியியல் பட்டம்
**அனுபவம்:**ஒருவருடத்தொழில்அனுபவம்
அல்லது
தேசியத் தொழில்திறனில் NVQ 7,
ஒரு வருடத் தொழில் அனுபவம்
**வயது :** 22 - 45
**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**
பொறியியல் பட்டம்
**அனுபவம்:**ஒருவருடத்தொழில்அனுபவம்
அல்லது
தேசிய தொழில்திறனில் NVQ 7,
ஒரு வருடத் தொழில் அனுபவம்
அத்துடன் கனிஷ்ட முகாமைத்துவச் சேவை தொகுதியில் 05 வருடச் சேவை
**வயது :** 22 ற்கு மேல்
**விண்ணப்பிக்கும் முறை :** தபால் மூலம்
**முகவரி :** தலைவர்
இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட், 341/21, சரணமாவத்தை, ராஜகிரிய
**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி :**
23 செப்டம்பர் 2023

### பணிப்பாளர் நாயகம்

**நிறுவனம் :** பாவனையாளர் அலுவல்கள், அதிகாரச் சபை.
**பணியிடம் :** கொழும்பு
**தகைமை :**
**வெளிவாரிவிண்ணபதாரிகள்:**
1 இளமானிப் பட்டம் : வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம், விவசாயம், சட்டம்
2. முதுகலைப் பட்டம் :
அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் முகாமைத்துவ நிறுவனத்தில் கூட்டு வர்த்தக அங்கத்துவம்
அனுபவம் : முகாமைத்துவ மட்டத்தில் 18 வருடங்கள், சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 5 வருடங்கள்.
கூட்டுத்தாபனம் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு
அல்லது
1. இளமானிப் பட்டம்
இயல்புடைய துறையில் கலாநிதி பட்டம் ஐந்து வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவமட்ட அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் முகாமைத்துவ அனுபவம்.
**உள்வாரி விண்ணப்பதாரரிகள்:-**
சிரேஷ்ட முகாமைத்துவப் பகுதியில் ஐந்து வருட சேவை,பல் ஒழுக்காற்று குழுக்களுக்கு தலைமை தாங்கும் வழி நடத்தும் நிரூபிக்கப்பட்ட ஆற்றல், மனித வள முகாமைத்துவத்தில் அனுபவம்.
**வயது :** 35க்கு குறையாமலும் 55 க்கு மேற்படாமலும்
**சம்பளம் :**HM2-1
சம்பள அளவுத் திட்டம்
**மேலதிகக் கொடுப்பனவுகள்:** போக்குவரத்து, எரிபொருள், தொழில்சார்
**விண்ணப்பிக்கும் முறை :** தபால் மூலம்
**முகவரி :** செயலாளர்.
வர்த்தகம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, இலக்கம் 492, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-3
**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி :**
23-9-2023

### கணக்காளர்

**நிறுவனம் :** Suganth sea food (PVT) LTD, Jaffna.
**பணியிடம் :** யாழ்ப்பாணம்
**தகைமை :** கணக்கியல் அல்லது நிதியியல் பட்டம்.
ICASL/CIMA தேர்வுப் பகுதி அல்லது முழுத் தகுதி
Accounting softwareஇல் பணிபுரியும் திறன் Microsoft excel சிறப்பு தேர்ச்சி
**அனுபவம் :** நிதி அல்லது கணக்கியல் 05 தொடக்கம் 10 வருடம்
**மேலதிக தகைமை :** ஆங்கிலம், சிங்களம்
**வயது :** 45க்குள்
**விண்ணப்பிக்கும் முறை :** சுயவிவரக் கோவையை அனுப்பவும் மின்னஞ்சல் முகவரி : info@suganth. lk

### நிதி முகாமையாளர்

**பணியிடம் :** பத்தரமுல்ல
**நிறுவனம் :** விவசாய அமைச்சு (SLRP)
**தகைமை :** இளமானிப் பட்டம் கணக்கீடு பொருளியல்
**அனுபவம் :** 10 வருடங்கள்
அல்லது
நாடளாவிய சேவை, தரம் ஒன்று உத்தியோகத்தர்.
மூன்று வருட சேவை தரம் ஒன்று பதவியில்

### நிதி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் (02)

**தகைமை:** BBA honors இளமானி பட்டம் நிதி, வியாபார முகாமை, முகாமைத்துவம், கணக்கியல், ஏனைய துறை சார்ந்த பட்டம்.
இரண்டு வருடத்துறை சார்ந்த அனுபவம்
அல்லது
NVQLevel 7
7 வருட தொழில் அனுபவம்
அல்லது
NVQ level 5
12 வருட தொழில் அனுபவம்
**மேலதிகத் தகைமை :** மும்மொழி ஆற்றல்
**வயது :** 45 ற்கு மேற்படாமல்
**விண்ணப்பிக்கும் முறை :** தபால் மூலம், நேரடியாக, e mail மூலம்
**விண்ணப்பிக்கும் இறுதித் திகதி :**
25 - 9 - 2023
**முகவரி :** chairman
project procurement committee
Small holder agribusiness and Resilience Project
Ministry of Agriculture,
2/2/1, Kandhawatha road,
Pelawatha, Battaramulla.
**தொடர்புகளுக்கு :** 0112770998

### காசாளர்

**பால் :** இருபாலாரும்
வயது : **22 - 30**
**பணியிடம் :** உரும்பிராய்
**தொடர்புகளுக்கு :** 0773344700

### வரவேற்பாளர் / செயலாளர்

**பால் :** இருபாலாரும்
**பணியிடம் :** யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு :** 0761062120

### இலத்திரனியல் மற்றும் தளபாட விற்பனை

**பால் :** ஆண்
**பணியிடம் :** யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு : 0773883879

### அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர்

**பால் :** பெண்
**தகைமை :** அடிப்படைக் கணக்கீடு மற்றும் கணினி அறிவு
**பணியிடம் :** சாவகச்சேரி
**தொடர்புகளுக்கு :** 0779495004

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

IV

புதன்கிழமை
13.09.2023

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்

JOB VACANCY

**அலங்கார வடிவமைப்பாளர்**
**சம்பளம்** : 35000
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு** : 0771100919

**விற்பனை உதவியாளர்**
**பால்** : பெண்
**பணியிடம்** : நல்லூர்
**தொடர்புகளுக்கு** : 0761661986

**பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர்**
**பணியிடம்** : நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel)
**சம்பளம்** : சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
**தொடர்புகளுக்கு** : 0777276818

**ஆங்கில விரிவுரையாளர்**
**தகைமை** : ஆங்கில டிப்ளோமா அல்லது பட்டம்
**பால்** : இருபாலாரும்
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு** : 0762979519

**மருந்தக உதவியாளர்**
**பால்** : பெண்
**நேரம்** : பகுதி நேரம் (4pm - 8.30 pm)
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு** : 0773952353

**Tekla Modeler**
**பால்** : பெண்
**தகைமை** : Tekla structure software
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு** : 0776790646 0212211393

**ஆசிரியர் / விரிவுரையாளர்**
**பால்** : பெண்
**தகைமை** : தையல்
அழகுக்கலை நிபுணர்
கேக் வடிவமைப்பாளர்
ஆரி வேலைப்பாடு
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு** : 0775313007

**தலைமையாசிரியர்**
Angel steps International
**பணியிடம்** : நீர்கொழும்பு
**நேரம்** : காலை 8:00 மணி தொடக்கம் மாலை 6:00 மணி வரை
**தகைமை** :
சிறந்த ஆங்கில மொழியாற்றல்,
முகாமைத்துவத்திறன்,
கணினி ஆற்றல்
**தொடர்புகளுக்கு** :
071 1585131, + 6427 258 1001
Email : angelstepsinternational @ gmail.com

**விற்பனை உதவியாளர்**
யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் வேலைவாய்ப்பு உள்ளது.
**பால்** : ஆண், பெண் இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0767403814

விளம்பரம் சேகரிப்பாளர்
(Advertise ment Collector)
**நேரம்** : பகுதி நேரம்
**பால்** : முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்பு
சம்பளம் : சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும்.
**தொடர்புகளுக்கு** :
0777277009

**தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளர்**
முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
**தொடர்புகளுக்கு** -
0777277009

**தோட்டக்காரர்**
**பணியிடம்** : எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணை.
தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
**தொடர்புகளுக்கு** -
0766482303

**கணக்கு உதவியாளர்**
**பணியிடம்** : யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல நிறுவனம்.
கணக்குவழக்குப்பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
**தொடர்புகளுக்கு** -
0777299386

